301

301



# மிழ் வாசகம்

## ரம் புத்தகம்

S. G. DANIEL

CLS

TB
631 (3)
N47.
33955

விலை 7 அணு

1947

# தமிழ் வாசகம்
## மூன்றும் புத்தகம்

## TAMIL THIRD READER

by
S. G. DANIEL, B.A.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 MAY 1947
MADRAS

*(Revised according to the Syllabus for Elementary Schools, 1939)*

THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
MADRAS BANGALORE MYSORE BEZWADA COLOMBO
1947

*Twenty Third Edition 1947* TM

TB
031 (20
N48

*Approved by the Madras Text-Book Committee—Vide Fort St. George Gazette, dated 2nd June, 1942, Part I, Page 87, and Part II, Page 106.*

B3955

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS (P.I.C. NO. Q.H. MS. 5)
FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY IN INDIA (P.I.C. NO. MS. 70)—
18-4-1947—B3329

## உபாத்தியாயருக்குக் குறிப்புக்கள்

1. பாடத்தை வாசிக்க ஆரம்பிக்குமுன் உபாத்தியாயர் அப் பாடத்தில் சொல்லியிருக்கும் விஷயத்தைப் பிள்ளைகளுடைய வாழ்க்கைக்குச் சம்பந்தப்படுத்தி அவர்களோடு அதைப்பற்றிச் சம்பாஷிக்க வேண்டும்.

2. அச்சமயத்தில் உபாத்தியாயரும் பிள்ளைகளும் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, பாடத்துக்குச் சம்பந்தமான பொருள்கள், உருவங்கள், படங்கள் முதலிய உபகரணங்களை ஆதாரமாகக்கொண்டு சம்பாஷிக்கவேண்டும். புதிய பாடத்திட்டத்திற்கிணங்க இப்புத்தகத்தில் முதல் இரண்டு புத்தகங்களிலுமில்லாத சுமார் ஐந்நூறு புதுச் சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் வரும் புதுச் சொற்களை அந்தந்தப் பாடத்தின் தலைப்பில் குறித்துக் காட்டியிருக்கிறது. சம்பாஷிக்கும்போது பிள்ளைகள் இப்புதுச் சொற்களையும் உபயோகிக்கும்படி உபாத்தியாயர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

3. சம்பாஷிக்கும்போது பாடத்துக்கு அதிக சம்பந்தமில்லாத விஷயங்களில் பிள்ளைகளுடைய கவனம் செல்லாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. விஷயங்கள் யாவும் பிள்ளைகள் மனதில் நன்றாய்ப் பதிந்தபின், அவற்றில் ஏதாவது இரண்டொரு வாக்கியங்களைக் குறிப்பிட்டு, அவைகளைப் பிள்ளைகள் பிழையின்றி எழுதும்படி செய்து, அதன்பின் புத்தகத்தைத் திறந்து வாசிக்கச் சொல்லவேண்டும்.

5. பிள்ளைகள் பிழையாய் வாசித்தால், உபாத்தியாயர் அவர்களைத் திருத்தி, சரியான பிரகாரம் வாசித்து மாதிரி காட்டவேண்டும். சத்தமாய் வாசிக்கத் தெரிந்தபின் மௌனமாக வாசிக்கவும் பிள்ளைகள் பழகவேண்டும்.

6. கடின பதங்களுக்குப் பிள்ளைகளிடத்திலிருந்தே பொருளை வருவிக்கப் பிரயாசப்படவேண்டும். அர்த்தத்தை வருவித்தபின் அதைக் கறுப்புப்பலகையில் எழுதிக் காட்டவேண்டும்.

7. பாடங்களின் இறுதியில் கொடுத்திருக்கும் அப்பியாசங்களை நடத்துவதுமன்றி, அவை போன்ற இன்னும் பல அப்பியாசங்களையும் உபாத்தியாயர் தயார்செய்து போதிக்கவேண்டும்.

8. பிள்ளைகளுக்குப் படிப்பில் உற்சாகமும் சந்தோஷமும் உண்டாகவும் இயற்கையறிவு வளரவுந்தக்கதாக ஒவ்வொரு பாடத்துக்கும் சம்பந்தமான கிண்டர்கார்ட்டன் தொழில்கள், சித்திரம் வரைதல், கதை, பாட்டு, ஆட்டம் முதலிய விஷயங்களும் கற்பிக்கவேண்டும்.

9. உபாத்தியாயர் ஒவ்வொரு பாடத்தையும் முன்னதாகவே வாசித்து, தயார் செய்து அதற்குப் பாடக் குறிப்புக்கள் எழுதிவைத்துக் கொண்டு போதிக்கவேண்டும். ஒவ்வொரு உபாத்தியாயரிடத்திலும் நல்ல தமிழ் அகராதி ஒன்று இருக்கவேண்டும்.

10. பிள்ளைகள் நல்லொழுக்க முறைகளை அனுசரிப்பதற்கு எதுவாக உபாத்தியாயர் தன் சம்பாஷணையையும், நடக்கையையும் வெகு கருத்தாய்ச் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

# பொருள் அடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | விக்தோரியா சக்கரவர்த்தினி | 1 |
| 2. | என் தாய் | 4 |
| 3. | எஜமானன் குரலோசை | 6 |
| 4. | ஜட்கா வண்டி | 9 |
| 5. | சந்தை | 12 |
| 6. | மயிலும் காகமும் | 15 |
| 7. | சீனதேசத்துப் பாடசாலை | 17 |
| 8. | சாட்சிசொன்ன கிளி | 20 |
| 9. | கோழி | 23 |
| 10. | சன்னியாசி வேஷம் | 27 |
| 11. | ஆல்பிரெட் அரசர் | 30 |
| 12. | வாயாடி வீரன் | 33 |
| 13. | கூலியாட்கள் | 36 |
| 14. | கவனமற்ற மாணுக்கன் | 38 |
| 15. | பயனற்றவை | 41 |
| 16. | புத்திசாலிப் பையன் | 42 |
| 17. | திருட்டுப் பையன் | 44 |
| 18. | நான் எதைச் செய்வேன்? | 46 |
| 19. | நான் எதைச் செய்யமாட்டேன்? | 48 |
| 20. | வாழைமரம் | 49 |
| 21. | சுடாத பழம் | 53 |
| 22. | பெரிய பழம் | 56 |
| 23. | திசைகள் | 58 |
| 24. | வழியே ஏகுக வழியே மீளுக | 61 |
| 25. | எலும்புக்கூடு | 63 |
| 26. | அம்மை | 66 |
| 27. | கோபம் | 69 |

| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 28. | குடியானவன் ... ... ... ... ... ... | 70 |
| 29. | ஆப்பிரிக்கா கண்டத்து அறிவீனர் ... ... ... | 73 |
| 30. | கிழவனும் சிறுவனும் ... ... ... ... ... | 75 |
| 31. | கடிதம் எழுதுவது ... ... ... ... ... | 78 |
| 32. | கடிதங்களுக்கு மேல் விலாசம் எழுதும் முறை ... ... | 80 |
| 33. | ஓர் ஊமை உபாத்தியாயர் ... ... ... ... | 81 |
| 34. | கூட்டுறவு ... ... ... ... ... ... | 85 |
| 35. | கூட்டுறவு (கீர்த்தனை) ... ... ... ... ... | 88 |
| 36. | வேத வாக்கியங்கள் ... ... ... ... ... | 89 |
| 37. | செய்யுள்.—கொன்றைவேந்தன் (சுருக்கம்) ... ... | 92 |
| 38. | ,, ஆத்திசூடி (சுருக்கம்) ... ... | 94 |
| 39. | பழமொழிகள் ... ... ... ... ... ... | 96 |
| | செய்யுள் பாகத்தின் அரும்பதவுரை ... ... ... ... | 97 |

# மூன்றாம் புத்தகம்



## 1. விக்தோரியா சக்கரவர்த்தினி

| | | |
|---|---|---|
| சக்கரவர்த்தினி | நோக்கம் | அருமையான |
| பாட்டியார் | மகராசி | தாதி |
| சமாதானம் | மகாராணி | புத்திரி |
| அரசாண்டு | உத்தமி | தடவை |
| குடிகள் | வாழ்த்துப்பெயர் | ஞாபகம் |

விக்தோரியா சக்கரவர்த்தினி, இப்பொழுது இங்கிலாந்து தேசத்தை ஆண்டுவரும் ஜியார்ஜ் மன்னனின் பெரிய பாட்டியார். இவ்வம்மையார் நமது தேசத்தை அநேக வருஷங்கள் நீதியோ டும், சமாதானத்தோடும் அரசாண்டு வந்தனர். குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே எப்பொழு தும் நோக்கமாய் இருந்தனர். ஆகையால் இம் மகராசிக்கு உத்தமியாம் விக்தோரியா என்னும் வாழ்த்துப் பெயர் வழங்கி வருகிறது.

விக்தோரியா மகாராணி சிறு பெண்ணுயிருக் கையில், அப்பெண்மணிக்குக் கல்வி கற்பிக்கவும், அவளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும் ஓர் அருமையான தாதி ஏற்படுத்தப்பட்டிருந்தாள். ஒருநாள் அந்தத் தாதியிடத்தில் அப்பெண்ணின் தாயார் தன் புத்திரி அன்றையத்தினம் எவ்வித மாகப் பாடம் படித்தாள் என்றும், எவ்வாறு நடந்துகொண்டாள் என்றும் கேட்டார்கள். அதற்கு அத்தாதி ஒரே ஒரு தடவை மாத்திரம் குழந்தை கொஞ்சம் தொந்தரவு கொடுத்தது என்று சொன்னுள். அதை அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்த விக்தோரியா, தாதியைப் பார்த்து, 'ஒரு தடவையல்ல, இரண்டு தடவை நான் தொந் தரவு செய்தேனே, அது உனக்கு ஞாபகமில் லையா!' என்று உண்மை உரைத்தாள்.

இச்சிறு அரசக் குழந்தையைப்போல நாம் "உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்ல தென்றும்" எப்பொழுதும் சொல்லவேண்டும்.

## அப்பியாசம்

1. விடை சொல்லு:

1. ஆறும் ஜியார்ஜ் சக்கரவர்த்திக்கு விக்தோரியா சக்கரவர்த்தினி என்ன வேண்டும்?

2. நீ யாரை உன்னுடைய பெரிய பாட்டியார் என்று அழைப்பாய்?

3. விக்தோரியா சக்கரவர்த்தினியின் வாழ்த்துப் பெயர் என்ன? ஏன் அந்தப் பெயர் அவருக்குக் கிடைத்தது?

4. குழந்தைப் பிராயத்தில் அவரிடத்தில் காணப்பட்ட நற்குணம் என்ன?

2. கீழேவரும் அட்டவணையைப் பூர்த்தி செய்:

| ஆண் | பெண் |
| --- | --- |
| சக்கரவர்த்தி | சக்கரவர்த்தினி |
| —— | பாட்டியார் |
| —— | மகராசி |
| —— | உத்தமி |
| —— | இராணி |
| —— | புத்திரி |

3. "உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்."

உள்ளது, இல்லது என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக வேறு வார்த்தைகளை உபயோகப்படுத்தி இவ்வாக்கியத்தைத் திருப்பி எழுது.

4. இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:

கொஞ்சம், இப்பொழுது, நீதி.



# 2. என் தாய்

| | | |
|---|---|---|
| நித்திரை | ஆற்றி | பத்தியம் |
| பாலகன் | அழுதபோது | கண்விழித்து |
| ஏந்தி | தாலாட்டி | ஒப்பற்ற |
| அணைத்து | முத்தமிட்டு | பெருமை |
| இடுப்பு | தொட்டில் | உணருகிறது |
| ஊட்டி | காவல் | ஆயுள் |
| பசி | வியாதி | மாறாத |

இந்தப் படத்தில் நீ பார்க்கிற தென்ன? ஒரு அன்புள்ள தாய் தன் அருமைக் குழந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து, அது படுத்து நித்திரை செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

உன் அன்புள்ள தாய் உனக்காக எத்தனை தரம் இப்படிச் செய்திருக்கிறாள்? நீ பாலகனா

யிருந்தபொழுது, அவள் உன்னைத் தன் கைகளில் ஏந்தி, மார்போடணைத்துப் பால் கொடுத்து வளர்த்தாள். உனக்குப் பல் முளைத்த பின், உன்னை இடுப்பில் வைத்து, வேடிக்கை காட்டி, சாதம் ஊட்டி, உன் பசியை ஆற்றினுள். நீ அழுதபோது உன்னைத் தாலாட்டி, முத்தமிட்டுத் தொட்டிலில் தூங்கவைத்தாள். நீ தூங்கும்போது ஈ, எறும்பு முதலிய பூச்சிகள் கடியாதபடி, உன் பக்கத்திலிருந்து காவல் காத்து உன்னைக் காப் பாற்றினுள். நீ வியாதியாயிருந்தபொழுது, வைத் தியரை யழைத்து வந்து, உனக்கு மருந்து கொடுத்தது மல்லாமல், தானும் மருந்துண்டு, பத்தியம் காத்து, கண்விழித்துக் கஷ்டப் பட்டாள். உன்னைச் சந்தோஷப்படுத்தும்படி, உனக்கு எத்தனையோ விளையாட்டுச் சாமான்களை வாங்கிக் கொடுத்தாள். நீ நன்ருய் நடக்கவும், ஓடவும் உனக்குக் கற்றுக்கொடுத்தாள். அப்பா, அம்மா, மாமா, தாத்தா என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொடுத்து உனக்குப் பேச்சு கற்பித்த முதல் உபாத்தியாயரும் உன் ஒப்பற்ற தாய்தான். இப்படிப்பட்ட உன் அருமைத்தாயின் பெரு மையை நீ உணருகிறதுண்டோ?

தன் ஆயுளின் ஒவ்வொரு நாளிலும் என் தாயார் தன் உயிரையும் மறந்து, எனக்கு எவ் வளவோ நன்மைகளைச் செய்துகொண்டு வந் திருக்கிருர்கள் என்று உணருகிறேன். அவர்கள் எனக்குச் செய்திருக்கும் நன்மைகளை எடுத் துரைக்க ஆயிரம் நாவுகள்கூடப் போதாது. ஆத லால், நான் யாரை மறந்தாலும் என் தாயாரை மறக்கமாட்டேன். அவர்களிடத்தில் என்றும் மாருத அன்புள்ளவனுயிருப்பேன்.

அப்பியாசம்

1. விடை சொல்லு:

1. நீ வியாதியாயிருந்த காலத்தில் உன் தாயார் உனக்கு என்னென்ன செய்தாள்?

2. உன் முதல் உபாத்தியாயர் யார்?

3. அவர் கற்றுக்கொடுத்த பாடங்கள் எவை?

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகள் வைத்து வாசி:

உன் தாயார் உன்னை —— வைத்து, வேடிக்கை ——, சாதம் ——, உன் —— ஆற்றினாள்.

3. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

நித்திரை, பாலகன், பத்தியம், ஆயுள்.

4. (1) உன் பெயர் என்ன?

(2) உன் அண்ணன் பெயர் என்ன?

(3) இந்தப் பாடத்தில் வரும் சில பொருள்களின் பெயர்களைச் சொல்லு.

(4) பல், பால், சாதம், ஈ, எறும்பு, மருந்து என்னும் பொருள்களின் பெயர்கள் ஆகிய இச்சொற்களுக்கு என்ன பெயரிடலாம்?

[பெயர்ச்சொல் என்று பெயரிடலாம். ஒரு பொருளின் பெயரைக் காட்டும் சொல் பெயர்ச்சொல்லாம்.]

# 3. எஜமானன் குரலோசை

| | | |
|---|---|---|
| எஜமானன் | ஆர்மோனியம் | பிரசங்கம் |
| குரலோசை | இணைத்து | விகடம் |
| களிக்காதவர் | வித்துவான் | ஒலிப்பெட்டி |
| ஆனந்தம் | ஒலிக்குறிப்பு | கிராமபோன் |
| சங்கீதம் | இறுகிய | உற்றுப்பார்க்க |
| கின்னரம் | சுழற்றினால் | உற்றுக்கேட்க |
| நாகசுரம் | புனல் | ஆவலாய் |



பாட்டுப் பாடுவதைக் கேட்டுக் களிக்காத வர்கள் இல்லை. பாட்டென்றால் எல்லாருக்கும் ஆனந்தம் உண்டாகும். பாட்டைக் கேட்டால் அழுகிற குழந்தையும் வாயை மூடும். தெருவில் சங்கீத சத்தம் கேட்டால் பெரியவர்கள்கூட வேலையை விட்டு வெளியே போய்ப்பார்ப்பார்கள்.

சிலர் இனிமையாகப் பாட்டுப் பாடுவார்கள். சிலர் கின்னரம், ஆர்மோனியம், வீணை, நாக சுரம், புல்லாங்குழல் முதலிய சங்கீதக் கருவிக ளோடு தமது குரலை இணைத்துப் பாடுவதும் உண்டு. அதைக்கேட்க நமக்கு ஆனந்தமாக இருக்கும்.

ஆனால் சங்கீதம் பாடிச் சந்தோஷம் விளை விப்பவர்கள் சிலரே. விரும்பிய போதெல்லாம் அவர்கள் கிடைப்பதும் அருமை. ஆகையால், சங்கீத வித்துவான்களின் பாடல் ஒலிக்குறிப்பை இறுகிய மெழுகினாலாகிய சக்கர வடிவமான ஒரு

விதத் தட்டுகளில் பதியும்படிச்செய்து காப்பாற்றி வைக்கிறார்கள்.

அந்தத் தட்டுகளை ஒவ்வொன்றாய் மேலே படத்தில் காட்டியபடி அதற்கென்றேற்பட்ட பெட்டியின்மேல் வைத்துச் சுழற்றினால் அதில் பாட்டின் ஓசை உண்டாகிறது. ஒருவகைத் தடித்த ஊசியின் உதவியால் அவ்வோசை ஏற்படுகிறது. பெரிய புனல்போன்ற குழாயானது பாட்டு அநேகர் காதில் விழும்படி செய்கிறது.

பாட்டேயல்ல, பிரசங்கம், விகடம், சிரிப்பு முதலிய குரல் ஓசை யாவையும் இப்பெட்டியின் உதவியால் கேட்டுக் களிக்கலாம். படம் பிடிக்கும் கருவியால் உருவத்தை உள்ளபடி பிடித்து வைப்பதுபோல, ஒலிபதியும் கருவியால் குரலோசையையும் பிடித்து வைத்துக் களிக்கின்றோம்.

இவ்வகை ஒலிப்பெட்டிக்குக் கிராமவ்போன் என்று பெயர். படத்தில் நாய் ஏன் அப்பெட்டியை உற்றுப்பார்க்கின்றது? தன் எஜமானன் குரலோசையை அதில் உற்றுக் கேட்கிறது. எஜமானன் அதில் எங்கே இருக்கிறான் என்று ஆவலாய்ப் பார்க்கிறது.

அப்பியாசம்

1. விடை கூறு:

1. சாதாரண சங்கீதக் கருவிகள் எவை?

2. கிராமவ்போனில் பாட்டுகள் தவிர வேறென்ன குரலோசைகள் கேட்டுக் களிக்கலாம்?

3. கிராமவ்போன் தட்டுகள் எதினால் செய்யப்படுகின்றன?

2. உற்றுப்பார்க்க, உற்றுக்கேட்க என்னும் வார்த்தைகளை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

3. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு. ஆனந்தம், வித்துவான், ஒலி, புனல், விகடம், ஆவல்.

4. நாய், பெட்டி, படம், வீணை, நாகசுரம், புல்லாங் குழல் இவை என்ன சொற்கள்? ஏன்?



# 4. ஜட்கா வண்டி

| | | |
|---|---|---|
| ஜட்கா | கண்டபடி | துடித்து |
| தங்காய் | நினைத்த | ஒன்றாய் |
| கூண்டு | சவுக்கு | தொடர்ந்து |
| சண்டி | சுறுக்காய் | நோகும் |

வர்ணமெட்டு, தங்கச்சிந்து

1. வண்டி நல்ல வண்டி இது,
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
வர்ணமிட்ட கூண்டு வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

2. சண்டிக் குதிரை வண்டி,
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
கண்டபடி ஓடும் வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

3. டக் டக் என ஓடும் வண்டி,
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
கப் கப் என நிற்கும் வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

4. நின்று நின்றே ஓடினுலும்,
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
நினைத்தவிடம் சேரும் வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

5. வண்டியோட்டும் சாரதியின்
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
நீண்ட சவுக்கைப் பாராய்
ஓ! சின்னத் தங்காய்.

6. சௌக் சௌக் கெனச் சுறுக்காய்
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
சவுக்கிஞ லடித்திடுவான்
ஓ! சின்னத் தங்காய்.

7. அடித்தவுடன் அக்குதிரை
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
துடித்துக்கொண்டே யோடுது பார்,
ஓ! சின்னத் தங்காய்.

8. நன்ருக நான்கு பேர்கள்,
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
ஒன்ரு யுட்காரும் வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

9. தொடர்ந்ததில் சவாரி செய்தால்,
ஓ சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
உடம்பெல்லாம் நோகும் வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

10. இந்த வண்டி என்ன வண்டி?
ஓ! சின்னத் தங்காய், ஓ! சின்னத் தங்காய்,
இந்த வண்டி ஜட்கா வண்டி,
ஓ! சின்னத் தங்காய்.

## அப்பியாசம்

1. விடை சொல்லு:

1. நீ என்னென்ன மாதிரி வண்டிகள் பார்த்திருக்கிருய்?

2. ஜட்கா வண்டியை இழுத்துக்கொண்டு செல்வது எது?

2. வண்டி ஓட்டுகிறவன் என்னும் வார்த்தைக்குப் பதிலாக இப்பாடத்தில் உபயோகித்திருக்கும் வார்த்தை என்ன?

3. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகளைச் சொல்லு:
வர்ணம், சுறுக்காய், நோகும், உடம்பு.

4. சண்டிக்குதிரை, சண்டிமாடு, சண்டித்தனம் இவற்றை விவரித்துச் சொல்லு.

5. சவுக்கு என்னும் வார்த்தையை வைத்து ஒரு சிறு வாக்கியம் எழுது.

# 5. சந்தை

| | | |
|---|---|---|
| சந்தை | சுவர் | உறவினர் |
| கிராமங்கள் | விசேஷமாக | பிச்சை |
| முறை | கூடாரம் | முடிச்சு |
| மொத்தமாய் | மறைவு | பத்திரமாய் |
| மத்தி | வரிசை | சந்தடி |
| மைதானம் | பெரும்பாலும் | வாக்குவாதம் |
| கிணறு | தட்டுமுட்டு | போலீஸ் |
| சுற்றிலும் | தட்டிகள் | இரைச்சல் |

குறித்த ஏதாவது ஒரு தினத்தில் பல ஜனங்கள் ஒன்றுகூடி வியாபாரம் செய்யும் இடத்துக்குச் சந்தை என்று பெயர். சாதாரணமாய்ச் சந்தை வாரத்துக்கு ஒருமுறை கூடும். சில ஊர்களில் வாரத்துக்கு இருமுறை கூடுவதும் உண்டு.

கிராமங்களில் பெரிய கடைகள் இல்லை. ஆகையால் அங்கு வசிக்கும் ஜனங்கள் சந்தை கூடும் தினங்களில் சந்தைக்குப்போய் வேண்டிய சாமான்களை மொத்தமாய் வாங்கி வைத்துக் கொள்வார்கள்.

பல கிராமங்களுக்கு மத்தியில் உள்ள ஒரு பெரிய கிராமத்தில் சந்தை கூடுவது வழக்கம். சில ஊர்களில் காலையிலும், சில ஊர்களில் மாலையிலும், சில ஊர்களில் நாள் முழுவதும் சந்தை கூடுவதுண்டு.

சாதாரணமாய் ஊருக்கு வெளியில் ஒரு மைதானத்தில் சந்தை கூடும். அதில் நிழலுக்காகச் சில மரங்கள் இருக்கும். அங்குக் கிணறும் உண்டு. சில ஊர்களில் சந்தை நடக்கும் இடத்தைச் சுற்றிலும் சுவர் எழுப்பியிருக்கும்.

பட்டணங்களில் உள்ள கடைகளைப்போல் அங்குக் கடைகளுக்கென்று விசேஷமாகக் கட்டடங்கள் கட்டி வைத்திருக்கமாட்டார்கள். சமயத்துக்குத் தக்கபடி வியாபாரிகள் ஏதாவது ஏற்பாடு செய்துகொள்வார்கள். சிலர் சிறு கூடாரங்கள் போட்டுக்கொள்வார்கள். சிலர் தட்டிகளையாவது, தென்னங் கீற்றுகளையாவது வெயில் மறைவுக்காக வைத்துக்கொள்வார்கள்.

கடைக்காரர்கள் தரையில் வரிசை வரிசையாய் உட்காருவார்கள். விற்கிறவர்களும் வாங்குகிறவர்களும் பெரும்பாலும் கிராமத்தாரே.

பலவிதத் தானியங்கள், காய் கறிகள், பழங்கள், துணிகள், தட்டுமுட்டுச் சாமான்கள் யாவும் சந்தையில் கிடைக்கும். சில பெரிய சந்தைகளில் ஆடுமாடுகளும் விற்பதுண்டு.

வியாபாரிகள் தங்கள் பொருள்களை விற்பதற்காகச் சந்தைக்குச் செல்வார்கள். பெரும்பான்மையோர் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்காகப் போவார்கள். சிலர் வேடிக்கைப் பார்க்கப் போவார்கள். சிலர் தங்கள் உறவினர், சிநேகிதர் முதலானவர்களைப் பார்க்கும் நோக்கத்தோடு போவார்கள். வேறு சிலர் பிச்சையெடுக்கப் போவார்கள். இன்னும் சிலர் கையில் அகப்பட்டதைச் சுழற்றிக்கொண்டு போகலாம் என்னும் கெட்ட நோக்கத்தோடு போவார்கள். சந்தையில் பலவிதமான மனிதர்கள் கூடுவதால், சந்தைக்குப் போகிறவர்கள் தங்கள் பண முடிச்சுகளை வெகு பத்திரமாய் வைத்துக்கொள்ள வேண்டும்.

சந்தையில் எப்பொழுதும் சந்தடியாகவே யிருக்கும். அங்கங்கே கைச் சண்டைகளும், வாக்குவாதங்களும் நடப்பதுமுண்டு. இவைகளைத் தடுப்பதற்காகப் போலீஸ்காவல் சந்தையில் உண்டு. ஆகிலும் சந்தை நடக்கும் சமயத்தில் சந்தை இரைச்சலைத் தடுக்க ஒருவராலும் முடியாது.

## அப்பியாசம்

1. விடை சொல்லு:

   1. சந்தை என்றால் என்ன?

   2. சந்தையில் என்னென்ன சாமான்கள் விற்கும்?

   3. சந்தை சாதாரணமாய் எங்கே, எப்பொழுது கூடும்?

2. சந்தை, சண்டை இப்பதங்களை உபயோகப்படுத்தி ஒவ்வொரு வாக்கியம் எழுது.

3. கீழேவரும் அட்டவணையைப் பூர்த்தி செய்.

| ஒன்று (ஒருமை) | ஒன்றுக்கதிகம் (பன்மை) |
|---|---|
| சந்தை | ——— |
| தினம் | ——— |
| வியாபாரி | ——— |
| இடம் | ——— |
| ஊர் | ——— |
| சாமான் | ——— |
| கிராமம் | ——— |
| மைதானம் | ——— |
| சுவர் | ——— |
| சிநேகிதன் | ——— |

[ஒன்றைக்காட்டும் சொல்லுக்கு ஒருமை என்றும், பலவற்றைக் காட்டும் சொல்லுக்குப் பன்மை என்றும் பெயர்.]

4. இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:
சில, சிலர், நிழல், பெரிய.



## 6. மயிலும் காகமும்

| | | |
|---|---|---|
| கன்னங்கறேல் | பிரபு | குப்பைக்குழி |
| அவலக்ஷணம் | அரமனை | கிண்டி |
| அந்தஸ்து | தோகை | உன்னதம் |
| பருகும் | தளுக்கு | கர்வம் |
| பளிங்கு | மினுக்கு | விவேகம் |

மானு வென்றொரு மயிலும் கானு வென்றொரு காகமும் இருந்தன. ஒருநாள் அவை இரண்டும் ஒரு குளக்கரைக்குத் தண்ணீர் குடிக்கப் பறந்து

போயின. தண்ணீர் பருகும் சமயத்தில் ஒவ்வொன்றும் தன் தன் உருவத்தைப் பளிங்கு போன்ற தெளிவான ஜலத்தில் பார்த்துக் களிப்படைந்தது.

தாகம் தீர்ந்தவுடன் மாஞ காஞவை நோக்கி, "கன்னங்கறேலென்று அவலக்ஷணமாயிருக்கும் காகமே, என்முன் வந்து நிற்பதற்கு உனக்குச் சற்றெனிலும் வெட்கமில்லையா? என் அழகென்ன? என் அந்தஸ்தென்ன? உனக்குத் தெரியாதா? இராஜாக்களும் பிரபுக்களும் என்னை எவ்வளவு பிரியத்துடன் தங்கள் அரமனைகளில் வைத்து வளர்க்கிருர்கள். என் தோகையிலிருக்கும் அழகிய வர்ணங்களைப் பார்த்து எவ்வளவாய் ஆனந்திக்கிருர்கள்" என்று மிகுந்த கர்வத்துடன் உரைத்தது.

அதைக்கேட்ட காஞ, "ஆம் அண்ணு, நீ சொல்வது சரியே, உன் தளுக்கும் மினுக்கும் உன் தோகையிலேயே யன்றி வேறெதிலுமில்லை. நீ கோழியைப்போல குப்பைக் குழியைக் கிண்டிக் கொண்டு, தரையிலே திரியும் பட்சி யென்பதை மறந்து விட்டாயென்று தோன்றுகிறது. உன்னதங்களிலிருக்கும் தேவர்கள்கூட ஆனந்திக்கும்படியாக, உயர ஆகாயத்தில் அழகாய்ப் பறந்து செல்லக்கூடிய என்னைப்போல் உன்ஞல் பறக்கக் கூடுமோ? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மேன்மையைக் கடவுள் கொடுத்திருக்கிருர்; ஆகையால் கர்வங்கொள்ளாதே" யென்று விவேகமாய்ப் பதில் சொல்லி வேகமாய்ப் பறந்து போயிற்று.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, புஸ்தகத்தை மூடிவிட்டு, நீயே சொல்லு.

2. தண்ணீர் பருகும்சமயத்தில் ஒவ்வொன்றும் தன் தன் உருவத்தைப் பளிங்கு போன்ற தெளிவான ஜலத்தில் பார்த்துக் களிப்படைந்தது. தடித்த எழுத்துக்களையுடைய பதங்களுக்குப் பதிலாக வேறு பதங்கள் உபயோகப்படுத்தி இவ்வாக்கியத்தைத் திருப்பி எழுது.

3. காகம் பறந்தது
மயில் தண்ணீர் குடித்தது

இவற்றில் காகம், மயில், தண்ணீர் என்பவை என்ன சொற்கள்? பறந்தது, குடித்தது என்பவை எதைக் காட்டும் சொற்கள்?

[பறந்தது, குடித்தது என்னும் சொற்கள் ஒரு செய்கை அல்லது தொழிலைக் காட்டுகின்றன. செய்கை அல்லது தொழில் என்பதற்கு வினை என்றும் சொல்லலாம். ஆகையால் அவை வினைச்சொற்கள். பொருளின் செய்கை அல்லது தொழிலைக்காட்டும் சொல் வினைச்சொல்லாம்.]

# 7. சீனதேசத்துப் பாடசாலை

| | |
|---|---|
| வடகிழக்கு | உருப்போடுதல் |
| சீனர் | மனப்பாடம் |
| குடுமி | முற்காலம் |
| மேல்நோக்கி | தற்காலம் |

சீனதேசம் நமது இந்துதேசத்துக்கு வடகிழக்கில் இருக்கிறது. அது ஒரு பெரிய தேசம். நமது தேசத்தைப் பார்க்கிலும் அதில் அதிக ஜனங்கள் குடியிருக்கிருர்கள்.



சீனதேசத்தில் குடியிருக்கிற ஜனங்களுக்குச் சீனர் என்று பெயர். சீனரின் முகம் தட்டையா யிருக்கும். அவர்கள் நமது நாட்டில் உள்ளவர் களைப்போல தலையில் குடுமி வைத்துக்கொள்வார் கள். ஆனால் அவர்கள் அக்குடுமியை ஒரு பெரிய வால்போல் வளரவிட்டுத் தலையைச் சுற்றிக் கட்டிக்கொள்வார்கள். தலையைக்கொடுக்கச் சம் மதித்தாலும், குடுமியைக் கொடுக்க ஒரு சீனனும் சம்மதிக்கமாட்டான்.

சீனருடைய புத்தகங்கள் வெகு விநோதமான வைகள். நம்முடைய புத்தகங்களில் இருப்பது போல்வார்த்தைகள் ஒரே வரியில் இராமல் கீழும் மேலுமாயிருக்கும். சீனர் வாசிக்கும்பொழுது கீழ் இருக்கும் கடைசி வார்த்தையை வாசிக்கத் தொடங்கி, மேல்நோக்கி வாசிப்பார்கள்.

சீனதேசத்துப் பிள்ளைகள் நமது திண்ணைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைப்போல் சத்தம் போட்டுப் படிப்பார்கள். பாடங்களையெல்லாம் கிளிப்பிள்ளைபோல் சொன்னதைச்சொல்லி உருப் போடுவார்கள். படிக்கிற பாடத்தின் பொருள் இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது.

படத்தில் ஒரு உபாத்தியாயர் மேஜைக்கு முன் உட்கார்ந்திருக்கிறார். அவர் பக்கத்தில் ஒரு பையன் முதுகைக்காட்டி நிற்கிறான். அவன் பாடம் ஒப்புவிக்கும்போது புத்தகத்தைப் பாராத படி இப்படி முதுகைக் காட்டி நிற்கவேண்டும். சீனர் 'மனப்பாடமாய்ச் சொல்' என்பதற்கு, "புத் தகத்துக்கு முதுகைக்காட்டு" என்பார்களாம். இது நமக்கு வேடிக்கையாகத் தோன்றுகிறதல் லவா? இது அத்தேசத்தின் முற்கால வழக்கம். தற்காலத்தில் சீனர் மேல்நாட்டு முறைகளை அநு சரித்துக் கல்வியில் முன்னேறிக்கொண்டு வரு கிறார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகையும் மிகப் பெருகிவருகிறது.

### அப்பியாசம்

1. விடை கூறு:

1. சீனதேசம் இந்தியா தேசத்துக்கு எந்தப் பக் கத்தில் இருக்கிறது? இரண்டு தேசங்களையும் பூகோளப் படத்தில் காட்டு.

2. சீனருடைய முகம் எப்படியிருக்கும்? தலைமயிரை எவ்விதம் வைத்திருப்பார்கள்?

3. சீனருடைய புஸ்தகங்கள் எப்படி எழுதப்பட் டிருக்கும்?

4. புத்தகத்துக்கு முதுகைக் காட்டு என்றால் அவர்களு டைய அர்த்தம் என்ன?

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

உருப்போடு, மனப்பாடம், குடுமி, விநோதம்.

3. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:

முதல், கீழ், அதிகம், தற்காலம்.

4. படத்தில் ஒரு உபாத்தியாயர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். அவர் பக்கத்தில் ஒரு பையன் நிற்கிறான்.

இவ்வாக்கியங்களிலிருக்கும் பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் எடுத்தெழுது.

# 8. சாட்சிசொன்ன கிளி

| | | |
|---|---|---|
| வாதி | கோர்ட்டு | விசாரித்தான் |
| பிரதிவாதி | பிராது | தண்டித்தார் |
| சாட்சி | ருஜு | சொந்தக்காரன் |
| நியாயாதிபதி | குற்றவாளி | கோவைக்கனி |
| வக்கீல் | வருத்தப்பட்டு | |

குடியானவன் ஒருவன் கிளிப்பிள்ளை ஒன்றை மிகவும் அருமையாய் வளர்த்துவந்தான். அவன் அதற்கு, அக்கா அக்கா: 'ரங்காரங்கா: நீ யாரடா!' என்று பலவிதமான பேச்சுகள் கற்றுக்கொடுத்திருந்தான். அது அவன் கையில் உட்கார்ந்து தீனி தின்னும். அவன் வாயிலே தன் வாயை வைத்து அவனுக்கு முத்தம் கொடுக்கும். இந்த அருமையான கிளி ஒரு நாள் காணமற்போயிற்று. குடியானவன் மிகவும் வருத்தப்பட்டு, பல இடங்களுக்குப்போய் அதைத் தேடிப்பார்த்தான். பலரிடத்தில் அதைப்பற்றி விசாரித்தான். கடைசியாக அந்தக் கிளி பக்கத்து ஊரில் ஒருவனிடம்

இருப்பதாகத் தெரியவந்தது. குடியானவன் அவனிடம் சென்று, 'என் கிளியைத் தா' என்று கேட்டான். அதற்கவன், 'உன்னைக் கண்டதார்? உன் கிளியைக் கண்டதார்? போ, போ' என்று சொல்லிவிட்டான். அதனால் குடியானவன் கோர்ட்டில் அதைப்பற்றி பிராதுபண்ணினான். நியாயாதிபதி வாதியைப் பார்த்து, 'அது உன் கிளிதான் என்பதற்குச் சாட்சியுண்டா?' என்று கேட்டார். அதற்கவன், 'கிளிதான் என் சாட்சி' என்றான்.



பின்பு நியாயாதிபதி அந்தக் கிளியைக் கொண்டுவரச் சொன்னார். அப்பொழுது வாதி, கிளிக்கூட்டை மூடியிருந்த துணியை எடுத்துவிட்டு, தன் மூக்கைக் கூட்டின் ஓரமாய் வைத்து, 'தாயே, முத்தம் கொடு' என்றான். உடனே கிளி ஆசையாய் அவனுக்கு முத்தம் கொடுத்தது. அதைப் பிரதிவாதி கண்டு, 'ஐயா, இந்தக் கிளி எல்லாருக்கும் இப்படித்தான் முத்தங் கொடுக்கும். இதோ பாருங்கள் அதற்கு ருஜு' என்று, தன் வாயைக் கிட்டக்கொண்டுபோய், 'தாயே, முத்தங் கொடு' என்றான். அந்தக் கிளியோ, அவன் உதட்டை ஒரே கொத்தாய்க் கொத்திப் பிடுங்கி விட்டது. இதைக் கண்ட நியாயாதிபதியும்,

வக்கீல்களும், கோர்ட்டிலிருந்த மற்ற ஜனங்களும் அதிசயப்பட்டார்கள். பின்பு சொந்தக்காரன் கூட்டிலிருந்த கிளியைத் தன் கையில் ஏற்றிக் கொண்டு, தான் கொண்டுவந்த கோவைக்கனியை அதற்குக் கொடுத்தான். அது அவன் கையில் உட்கார்ந்து வெகு ஆவலாய் அப்பழத்தைத் தின்றது. கிளி தன்னை வளர்த்தவனிடம் காட்டின அன்பையும், அரிய செய்கையையும் நியாயாதிபதி கண்டு அதிசயித்து, அதைச் சொந்தக்காரனுக்குக் கொடுத்து, குற்றவாளியைத் தண்டித்தார்.

## அப்பியாசம்

1. இந்தக் கதையை மௌனமாகப் படித்து, புஸ்தகத்தை மூடிவைத்துவிட்டு, பின்பு சுருக்கமாகச் சொல்லு.

2. வாதி, பிரதிவாதி, வக்கீல், சாட்சி இவர்கள் ஒவ்வொருவரும் இவ்வழக்கில் எப்படி சம்பந்தப்பட்டவர்கள்?

3. வழக்கைத் தீர்த்துவிட்டவர் எவர்?

4. கிளிப்பிள்ளை என்பதுபோல் பிள்ளையென்னும் வார்த்தையைச் சேர்த்து வேறெந்தப் பிராணிகளையும் அழைக்கிறோம்? இரண்டு உதாரணங்கள் கொடு.

5. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

கோர்ட்டு, பிராது, ருஜு, நியாயாதிபதி, குற்றவாளி.

6. வாதி, கிளிதான் என் சாட்சி என்றான். நியாயாதிபதி கிளியைக் கொண்டுவரச் சொன்னார். இவ்வாக்கியங்களிலிருக்கும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது.



# 9. கோழி

| | | |
|---|---|---|
| சிவப்பு | வளைவாய் | புரு |
| பழுப்பு | தவிடு | லெக்ஹாண் |
| பெட்டை | அடைகாத்து | சீமைக்கோழி |
| கொண்டை | பொரிக்க | ஜாதிக்கோழி |
| அலகு | பொறுக்கி | கருங்கோழி |
| மொக்கை | ஜாக்கிரதை | கானங்கோழி |
| தட்டை | இடைக்கிடையே | விடுகதை |
| மீன்கொத்தி | செவிமடல்கள் | கரு |
| கவுதாரி | சத்துள்ள | அவிழ்தம் |

ஆடுமாடுகளைப்போல கோழிகளை அநேகர் வீட்டில் வளர்க்கிறார்கள். கோழி பார்ப்பதற்கு அழகாயிருக்கும். கோழிகள் வெள்ளை, கருமை, சிவப்பு, பழுப்பு முதலிய பல நிறங்களையுடையன. பெண்கோழிக்குப் பெட்டைக்கோழி என்றும், ஆண்கோழிக்குச் சேவல் என்றும் பெயர். பெட்டைக்கோழியைவிட சேவல் பார்ப்பதற்கு வெகு அழகாயிருக்கும். சேவல் பெட்டையைவிட

பெரிதாயிருக்கும். சேவலின் இறகுகள் நீண்டு பளபளப்பாய் இருக்கும். சேவலுக்குத் தலையில் கொண்டை ஒன்றுண்டு. அந்தக் கொண்டை சிவப்பாயிருக்கும்.

கோழி குப்பையைக் காலால் கிண்டி, அதில் கிடைக்கும் பூச்சி புழுக்களைத் தன் அலகால் கொத்தித் தின்னும் பட்சி. அதற்கு ஏற்ற பிரகாரம் அதன் அலகும் கால்களும் அமைக்கப்பட்டிருக் கின்றன. கோழிக்கு ஒவ்வொரு காலிலும் நான்கு தடிப்பான விரல்கள் உண்டு. அவைகளில் மூன்று முன்பக்கமும், ஒன்று பின்பக்கமும் இருக் கும். பின்விரல் வளையாமல் பின்பக்கமாகவே நீண்டுகொண்டு இருக்கும். அவ்விரல்களின் நுனியில் இருக்கும் நகங்கள் சிறுத்து மொக்கையா யிருக்கும். அதன் அலகு வாத்தின் அலகைப் போல் தட்டையாயாவது, மீன்கொத்தியின் அல கைப்போல் நீளமாயாவது, கிளியின் அலகைப் போல் வளைவாயாவது இராமல், காடை, கவுதாரி முதலிய பட்சிகளின் அலகைப்போல் கூர்மை யாயும் சிறிதாயுமிருக்கும்.

வீட்டில் வளர்க்கிற கோழிகளுக்கு நெல், கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய பலவிதத் தானியங் களும், தவிடும் போடுவார்கள்.

கோழியின் பின் விரலுக்குச் சற்று மேலே சிறு கொம்புகள்போல் வளைந்த இரண்டு கூரிய நகங்கள் உண்டு. சேவலுக்கு இந்நகங்கள் பெரி யவைகளாயிருக்கும். கோழிகள் ஒன்றோ டொன்று சண்டை போடும்பொழுது இந்நகங் களே அவைகளுக்குப் பலத்த ஆயுதங்களாக உதவு கின்றன.

சாதாரண பெட்டைக்கோழி வருஷத்தில் ஐம்பதறுபது முட்டைகளிடும். தினம் ஒன்றுக்கு ஒரு முட்டையாகப் பத்துப் பதினைந்து முட்டைகளிட்டுப் பின்பு முட்டைகள்மேல் படுத்துக் கொண்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கச்செய்யும். பொரித்த குஞ்சுகளை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றும். குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டு சில மணிநேரங்கள் ஆனவுடன், தாமே இரைபொறுக்கித் தின்னும். காக்கை, புரு முதலிய பட்சிகளைப்போல தாய்க்கோழி தன் வாயால் குஞ்சுகளுக்கு இரை கொடுப்பதில்லை. இரை பொறுக்கித் தின்னும் விதத்தை மாத்திரம் குஞ்சுகளுக்குக் காண்பிக்கும்.

லெக்ஹாண் என்னும் சீமைக்கோழி நாட்டுக் கோழியைப்போல் அடைகாப்பதில்லை. இடைக்கிடையே சில நாட்கள் தவிர வருஷம் முழுவதும் முட்டையிட்டுக்கொண்டே யிருக்கும். வருஷத்தில் இருநூறு முதல் முந்நூறு முட்டைகளிடும். நமது நாட்டில் சிலர் இந்தச் சீமைக் கோழியை வளர்த்து நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள். இந்த ஜாதிக்கோழிகள் இத்தலி தேசத்திலுள்ள லெக்ஹாண் என்னும்பட்டணத்திலிருந்து வந்தவை. இவற்றின் கொண்டையும் முகமும் சிவப்பு நிறமாயும், அலகும் தோலும் கால்களும் மஞ்சள் நிறமாயும், செவிமடல்கள் வெண்மை நிறமாயும் இருக்கும். நாட்டுக்கோழிகளை வளர்ப்பதுபோலவே இவைகளையும் அதிகக் கஷ்டமின்றி வளர்க்கலாம்.

கோழிமுட்டை மனிதருக்கு பலம் கொடுக்கக்கூடிய சத்துள்ள ஆகாரம். அதைப் பச்சையாகவும், அவித்தும், பலவிதப் பதார்த்தங்க

ளோடு சேர்த்தும் தின்பார்கள். சில வியாதி களுக்கு மருந்தாகவும் கோழிமுட்டை உபயோகப் படுகிறது. ‘ஒரு சாடியிலே இரண்டு தைலம்’ என்ற விடுகதையின்படி முட்டையில் வெள்ளைக் கருவும், மஞ்சள் கருவும் உண்டு. சிறு கோழிக் குஞ்சுகளையும், கருங்கோழியின் மாமிசத்தையும், கானங்கோழியின் மாமிசத்தையும் சிறந்த அவிழ்த மாகச் சிலர் உபயோகிக்கிறார்கள்.

சேவல் காலம் அறிந்து கூவும். விடியற் காலத்தில் சேவல் கூவுகிற சத்தத்தைக் கேட்டு, ஜனங்கள் படுக்கையை விட்டு எழுந்திருந்து தங் கள் வேலைகளை ஆரம்பிப்பார்கள்.

அப்பியாசம்

1. விடை கூறு:

1. பெட்டைக்கோழிக்கும் சேவலுக்கும் என்ன வித்தியாசம்?

2. கோழியின் கால்விரல்கள் எப்படியிருக்கின்றன? அவை ஏன் அப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன?

3. நாட்டுக்கோழியைவிட லெக்ஹாண் என்னும் சீமைக்கோழி எவ்விஷயத்தில் சிறந்தது?

4. சேவல் காலத்தை எப்படித் தெரிவிக்கும்?

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தை வைத்து வாசி:

கோழியின் அலகு —— அலகைப்போல் தட்டை யாயாவது —— அலகைப்போல் நீளமாயாவது, கிளியின் அலகைப்போல் —— யாவது, இராமல், காடை, கவுதாரி முதலிய —— அலகைப்போல் ——யும் —— யும் இருக்கும்.

3. பின்வரும் வாக்கியங்களை முதல் உதாரணத்தில் காட்டியிருக்கிறபடி பூர்த்தி செய்.

| ஒருமை | பன்மை |
| --- | --- |
| 1. கோழி தவிடு தின்கிறது. | கோழிகள் தவிடு தின்கின்றன. |
| 2. கோழி தண்ணீர் குடிக்கிறது. | ——— |
| 3. கோழி குப்பையைக் கிண்டுகிறது. | ——— |
| 4. சேவல் கூவுகிறது. | ——— |

4. ஒரு சாடியில் இரண்டு தைலம். இந்த விடுகதையை விடுவி.

# 10. சன்னியாசி வேஷம்

| | | |
| --- | --- | --- |
| பிழைக்க | அவமானம் | மகான் |
| தவித்து | தந்திரம் | அற்புதம் |
| பிரயாசப்பட்டு | உபாயம் | நம்பிக்கை |
| உத்தியோகம் | பாசாங்கு | குப்பல் குப்பலாய் |
| சொற்ப | லக்ஷியம் | குவித்து |
| விவசாயம் | பிதற்றினன் | ஏடு |
| குலம் | செப்புக்காசு | நடுச்சாமம் |

ஓர் ஊரில் ஏழை வாலிபன் ஒருவன் இருந்தான். அவன் உயர்குலத்தைச் சேர்ந்தவன், ஆகிலும் பிழைக்க வழியின்றி நெடுநாள் தவித்துக்கொண்டிருந்தான். சில இடங்களில் பிரயாசப்பட்டும் அவனுக்குச் சரியான உத்தியோகம் கிடைக்கவில்லை. அவன் சொற்பப் படிப்புடையவன். விவசாயத் தொழிலாவது, வேறு கைத்தொழிலாவது செய்தால், தன் ஜாதிக்கு அவமானமென்று நினைத்தான். வியாபாரம் செய்ய அவனிடம் முதலில்லை. ஆகையால் தந்திரமாய்ப் பணம் சம்பாதிக்க ஓர் உபாயம் செய்தான். அதென்னவென்றால், சன்னியாசி வேஷம்



போட்டுக்கொண்டு வேருெரு ஊருக்குப் போய், அங்கே தான் உலகத்தை வெறுத்தவன் போல பாசாங்கு பண்ணிஞன். ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தன்னிடம் வருகிறவர்களிடத்தில் தான் பணத்தை லக்ஷியம் பண்ணுவதில்லையென்றும், வெள்ளியைப் பொன்னுக்கும் சக்தி தனக்கு உண்டென்றும் பிதற்றிஞன். தன்னிடத்திலிருந்த சில செப்புக் காசுகளை இனமாகவும் சிலருக்குக் கொடுத்தான். ஊர் ஜனங்களில் சிலர் இவனை அற்புதங்கள் செய்யக்கூடிய ஒரு பெரிய மகான் என்று எண்ணிஞர்கள். வெகுபேர் வெள்ளி நகைகளைக் கொடுத்து, பொன்னுக்கும் படி வேண்டிக்கொண்டார்கள். அவன் தந்திரமாய்

அந்த வெள்ளி நகைகளை விற்று இரண்டொரு வருக்குப் பொன்னும் கொடுத்தான். உடனே ஊரார் சன்னியாசியிடம் முழுவதும் நம்பிக்கை வைத்துவிட்டார்கள். பெண்கள் யாவரும் பொன் ஞசை மேலிட்டுத் தமது வீடுகளிலிருந்த வெள்ளி நகைகள் யாவையும் கொண்டுவந்து சன்னியாசி முன் குப்பல் குப்பலாய்க் குவித்துவிட்டார்கள். சன்னியாசி ஒவ்வொருவருடைய பேரையும் நகை யையும் விபரமாய் ஒரு ஏட்டில் எழுதிக்கொண்டு, அவர்களை மறுநாள் உதயத்தில் வரும்படி அனுப்பிவிட்டான். அப்பால், அச் சன்னி யாசி நடுச்சாமத்தில் நகைகள் யாவையும் சேர்த் துக் கட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டான். ஜனங்கள் ஏமாந்துபோனார்கள்.

### அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, புஸ்த கத்தை மூடிவைத்துவிட்டு, பின்பு சுருக்கமாகச்சொல்லு.

2. இவற்றிற்கு அதே பொருள் உள்ள வேறு வார்த் தைகள் சொல்லு:

பாசாங்கு, லக்ஷியம், பிதற்றினன், மகான், விவ சாயம்.

3. சன்னியாசி உட்கார்ந்து,

சன்னியாசி உட்கார்ந்தான்.

இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசம் என்ன? முந் தினது முடிவுபெறாத ஒரு சொல் தொடர், பிந்தினது, முடிவுபெற்ற ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் முதலா வது எழும்பின எண்ணம் சன்னியாசி யென்னும் பெய ரிடத்தில் இருப்பதால் அப்பெயருக்கு எழுவாய் என்பது பெயர். (எழு = வாக்கியம் எழும்புவதற்கு அல்லது உண்டாவதற்கு, வாய் = இடம்).

சன்னியாசியைப்பற்றிய காரியம் அல்லது பயன் உட்கார்ந்தான் என்னும் வினைச்சொல்லில் நிலைத்திருக்கிறது. ஆகையால் அதற்குப் பயனிலையென்று பெயர். (பயன் = எழுவாய் செய்யும் காரியத்தின் பயன்; நிலை = நிற்கும் இடம்).

கவனிப்பு.

(1) வாக்கியம் உண்டாவதற்கு இடமாக இருக்கும் பெயர்ச்சொல் எழுவாய்.

(2) எழுவாய் செய்யும் காரியத்தின் முடிவு. பயனிலை.

(3) எழுவாயும் பயனிலையும் கூடியது வாக்கியம்.

(4) வாக்கியம் முடிந்த பொருளைத் தரும். ஆகையால், முடிவைக்காட்டக் கடைசியில் முற்றுப்புள்ளி (.) வைக்கிறோம். சன்னியாசி உட்கார்ந்தான் என்னும் வாக்கியத்தில் சன்னியாசி எழுவாய், உட்கார்ந்தான் பயனிலை. அது முடிவுபெற்ற ஒரு வாக்கியமாதலால் கடைசியில் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

# 11. ஆல்பிரெட் அரசர்

| | |
|---|---|
| இங்கிலாந்து | அலங்காரம் |
| அச்சுப் புஸ்தகம் | உற்சாகம் |
| அட்டை | பூரித்து |

அநேக வருஷங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் ஆல்பிரெட் என்று பேர்கொண்ட ஒரு அரசர் இருந்தார். அவ்வரசர் மிகவும் நல்லவர். அவர் காலத்தில் அச்சுப் புஸ்தகம் கிடையாது. எல்லாப் புஸ்தகங்களும் கையால்தான் எழுதப் பட்டிருந்தன.



ஆல்பிரெட் அரசர் குழந்தையாயிருக்கையில் ஒருநாள் தன் தாயார் அவ்வகைக் கையெழுத்துப் புஸ்தகம் ஒன்றைக் கையில் வைத்து வாசித்துக்கொண்டிருக்கக் கண்டார். அந்தப் புஸ்தகம் பார்வைக்கு வெகு அழகாயிருந்தது.

எழுத்துக்கள் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருந்தன. புஸ்தகத்தின் அட்டைகள் அலங்காரமாக இருந்தன. எல்லாப் பிள்ளைகளும் அதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டார்கள்; வெகு நேர்த்தியாயிருக்கிறது என்று சொல்லி மெச்சிக்கொண்டார்கள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த தாய், தன் பிள்ளைகளைப் பார்த்து, 'உங்களில் முந்தி வாசிக்கக் கற்றுக்கொள்ளுகிறவனுக்கு இந்தப் புஸ்தகத்தை இனமாகக் கொடுப்பேன்' என்று சொன்னாள். ஆல்பிரெட் அந்தத் தினமே தன் உபாத்தியாயரிடத்தில் போய்ப்படிக்க ஆரம்பித்தார். வெகு சுறுசுறுப்போடும், ஆசையோடும், உற்சாகத்தோடும் படித்தார். சில நாட்களுக்குள்ளே நன்ருய் வாசிக்கக் கற்றுக்கொண்டார். பின்பு தாயாரிடத்தில் போய், தனக்கு நன்ருய் வாசிக்கத் தெரியும் என்று பெருமையோடு சொன்னர். தாயார் ஆனந்தங்கொண்டு 'கண்ணே! மணியே!' என்று அன்பாகப் பல வார்த்தைகளைச் சொல்லி, இரு கன்னங்களிலும் முத்தமிட்டு, தன் வாக்குப்படி பையனுக்குப் புஸ்தகத்தை வெகுமதியாகக் கொடுத்துவிட்டாள். ஆல்பிரெட் அரசர் தன் ஜீவகாலம் முழுவதும் அடிக்கடி அதைப் பலரிடம் சொல்லி மனம் பூரித்து, சந்தோஷப்படுவாராம்.

அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, புஸ்தகத்தை மூடிவைத்துவிட்டு, பின்பு சொல்லு.

2. நாம் கல்வியில் விர்த்தியாகவேண்டுமானல் ஆல்பிரெட் அரசரைப்போல் எப்படி படிக்கவேண்டும்?

3. இவற்றிற்கு அதே பொருள் உள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

நேர்த்தி, அலங்காரம், ஆனந்தம், பூரித்து.

4. கீழேயுள்ள வாக்கியங்களில் முற்றுப்புள்ளி வைத்து எழுது:

ஆல்பிரெட் என்று ஓர் அரசர் இருந்தார் அவர் காலத்தில் அச்சுப் புஸ்தகம் கிடையாது புஸ்தகங்கள் எல்லாம் கையால் எழுதப்பட்டிருந்தன அம்மாதிரி புஸ்தகம் ஒன்றை அரசர் படித்தார்.

5. இந்த அட்டவணையைப் பூர்த்தி செய்:

| ஒருமை | பன்மை |
|---|---|
| அரசன் | —— |
| வாலிபன் | —— |
| சொந்தக்காரன் | —— |

6. ஆல்பிரெட் அரசர் சில நாட்களுக்குள்ளே நன்றாய் வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

இவ்வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் பன்மை ரூபமாயிருந்தபோதிலும் ஒருவரையே குறித்துக் காட்டுகின்றன. மரியாதைக்காக இப்படிப் பன்மையில் பேசுவது வழக்கம். இதற்கு மரியாதைப்பன்மையென்பது பெயர்.

# 12. வாயாடி வீரன்

| | |
|---|---|
| வாயாடி | சாக்கிரதை |
| தோழர் | வித்தை |
| தூஷிப்பான் | தலைகுனிந்தான் |
| யோசித்தார் | வீண்பேச்சு |
| ஒட்டிக்கு இரட்டி | ஒப்பற்ற |



வீரன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் ஒரு வாயாடி. எப்பொழுதும் சளசள வென்று ஏதாவது பேசிக்கொண்டே யிருப்பான். மற்றவர்களைப் பேசவிடமாட்டான். ஆகையால், ஊரார் அவனை வாயாடி வீரன் என்று சொல்லு வார்கள்.

அவன் படிக்க விரும்பித் தன் தோழரோடு ஒருநாள் பள்ளிக்கூடத்துக்குப் போனான். அவ னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்ள உபாத்தியாயருக்கு இஷ்டமில்லை. அவன் மற் றப் பிள்ளைகளைக் கெடுத்துவிடுவான் என்று பயப் பட்டார். பள்ளிக்கூடத்தில் சேர்க்காவிட்டால் கண்ட இடமெல்லாம் தன்னைத் தூஷிப்பானே யென்றும் யோசித்தார். சற்றுநேரம் யோசித்த

பின் அவர் பையனைப் பார்த்து 'வீரா! உன்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளுகிறேன். ஆனால் நீ மாதந்தோறும் சம்பளப்பணம் ஒட்டிக்கு இரட்டி கட்டவேண்டும்' என்றார். அதற்கு வீரன் 'என் ஐயா, நான் மாத்திரம் ஒட்டிக்கு இரட்டி கட்டவேண்டும்?' என்று கேட்டான். உபாத்தியாயர் வெகு சாந்தமாக, 'அப்பா! உனக்கு நான் இரண்டு வித்தைகள் படிப்பிக்க வேண்டியதாயிருக்கிறது. ஒன்று உன் நாவை அடக்கும் வித்தை, மற்றொன்று உன் நாவை உபயோகிக்கும் வித்தை. ஆகையால், நீ இரட்டைச் சம்பளம் கட்டவேண்டும்' என்று சொன்னார். வீரன் வெட்கத்தோடு தலை குனிந்தான். பின்பு அவன் உபாத்தியாயர் கற்பித்த யாவையும் கருத்துடன் கற்றான். வீண்பேச்சுப் பேசும் வழக்கத்தை விட்டுவிட்டான். ஒப்பற்ற மாணாக்கனாக விளங்கினான்.

### அப்பியாசம்

1. வீரனுக்கு உபாத்தியாயர் எந்த இரண்டு வித்தைகள் கற்றுக்கொடுப்பதாகச் சொன்னார்?

2. எதிர் வார்த்தைகள் சொல்லு:

வாயாடி, குனிந்தான், உயர்ந்தான்.

3. வீரன் என்னும் பெயரை எழுவாயாக வைத்து மூன்று வாக்கியங்கள் எழுது.

4. யோசித்தான், யோசித்தார், யோசித்தார்கள் என்னும் ஒவ்வொரு பயனிலையையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

5. இவற்றிற்கு அதே பொருள் உள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

தூஷிப்பான், ஒட்டிக்கு இரட்டி, வித்தை, நாவு.



# 13. கூலியாட்கள்

| | |
|---|---|
| தாவு | பயணம் |
| உத்தியோகஸ்தர் | சுமந்து |
| ஸ்டேஷன் | ஆத்திரம் |
| போர்ட்டர் | உழைக்கும் |
| கூலியாள் | இகழ்ச்சி |

நம்மில் அநேகர் ரெயில்வண்டியேறிப் பிரயாணம் செய்திருக்கிறோம் அல்லவா? ரெயில் வண்டி நிற்கிற ஒவ்வொரு தாவிலும், பலவிதமான பிரயாணிகளையும், உத்தியோகஸ்தரையும், பலகாரங்கள் விற்கிறவர்களையும் பார்க்கலாம். இவர்களைத்தவிர சாமான் சுமந்து செல்லும் 'போர்ட்டர்கள்' என்னும் கூலியாட்களையும் பார்க்கலாம். தூரமான இடங்களுக்குப் பயணம் போகிறவர்கள் அநேக சாமான்கள் கொண்டு

போவார்கள். தங்கள் சாமான்களைத் தூக்கிக் கொண்டுபோக அவர்களால் முடியாது. பிரயாணி களுக்குக் கூலியாட்கள் அவசியம் வேண்டும். கூலியாட்கள் இல்லாத சிறு ஸ்டேஷன்களில் பிரயாணிகள் அதிகக் கஷ்டப்படுவதைப் பார்க்க லாம். சில சமயங்களில் 'போர்ட்டர்! போர்ட் டர்!' 'கூலி! கூலி!' என்று உரத்த சத்தமாய் ஆத் திரத்துடன் பிரயாணிகள் கூலியாட்களைக் கூப் பிடுவார்கள்.

கூலிவேலை செய்கிறவர்கள் ஏழைகள். அவர் களில் அநேகருக்கு எழுதப் படிக்கத் தெரி யாது. ஆனால் அவர்கள் உதவி எல்லாருக்கும் வேண்டும். பிரயாணிகளுக்கு மாத்திரம் அல்ல, குடியானவர்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரி கள் முதலிய யாவருக்கும் அவர்கள் உதவிவேண் டும். சகலருக்கும் உதவிசெய்து மற்றவர்கள் சுகத்துக்காகப் பாடுபட்டு உழைக்கும் கூலியாட் களின்மேல் நாம் பட்சமாய் இருக்கவேண் டியது அவசியம் அல்லவா? கூலியாட்களின் வேலைக்குத் தகுந்த கூலியைக் கொடுத்து அவர் களை அன்பாய் நடத்தவேண்டும் அல்லவா? அவர்களைக் குறைவாய் எண்ணுவதும் இகழ்ச்சி யாய்ப் பேசுவதும் கூடாது.

'கீழோராயினும் தாழ உரை'

அப்பியாசம்

1. ஆங்கில வார்த்தைகளில் பலவற்றை நாம் தமிழ் வார்த்தைகளைப்போல வழங்குகிறோம். இப்பாடத்தில் உபயோகித்திருக்கும் ஆங்கில வார்த்தைகள் எவை?

2. கூலியாட்களை நாம் எப்படி நடத்தவேண்டும்? ஏன்?

3. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகள் வைத்து வாசி:

கூலியாட்களை —— எண்ணுவதும் —— பேசுவதும் கூடாது.

4. இவ்வாக்கியங்களைப் பன்மையில் எழுது.

(1) கூலியாள் மூட்டை தூக்கிக்கொண்டு போகிறான்.

(2) பிரயாணி கூலியாளைக் கூப்பிட்டான்.

(3) பலகாரம் விற்கிறவன் வந்தான்.

5. இவற்றிற்கு அதே பொருள் உள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

பிரயாணம், தாவு, போர்ட்டர், நஷ்டம், உழைக்கும், உரை.

6. உரை, உறை—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் உபயோகப்படுத்து.

# 14. கவனமற்ற மாணாக்கன்

| | |
|---|---|
| அடிக்கடி | தீர்மானம் |
| சங்கதி | விரைந்து |
| சிறுவன் | சும்மா |
| ஏதேதோ | திருகத் திருக |
| கட்டளை | கோள் |
| பிடிக்காது | கட்டோடே |
| இழுத்துவிட்டு | காலங்கழிப்பது |

வயதுசென்ற பெரியவர் ஒருவர் தன்னைக் குறித்து அடிக்கடி பின்வரும் சங்கதியைச் சொல்லுவார்.

நான் சிறுவனாயிருக்கையில் படிக்கிறதேயில்லை பெரிய சோம்பேறியாயிருந்தேன். என்னைப் போன்ற சோம்பேறிகளோடே கூடிக்கொண்டு

படிக்கும் நேரத்தில் அவர்களோடு ஏதேதோ பேசி விளையாடிக்கொண்டிருப்பேன். என் சங்கதி வெகுநாளாய் உபாத்தியாயருக்குத் தெரியாதிருந்தது. ஆனால் 'பலநாள் கள்ளன் ஒருநாள் அகப்படுவான்' என்னும் பழமொழிப்படி ஒருநாள் அகப்பட்டுக்கொண்டேன்.

உபாத்தியாயர் என் வகுப்புப் பிள்ளைகளைப் பார்த்து, 'பிள்ளைகளே, நீங்கள் சோம்பலாயிருக்கக்கூடாது. படிக்கிற நேரத்தில் விளையாடக் கூடாது. எல்லாரும் பாடத்தைக் கவனமாய்ப் படிக்கவேண்டும். யாராவது சோம்பலாயிருந்தால், கண்டவன் உடனே எனக்குச் சொல்ல வேண்டும்' என்று கட்டளையிட்டார்.

அப்போது நான், 'ஆகா! இதுவே நல்ல சமயம். கோபாலனுக்கும் எனக்கும் பிடிக்காதல்லவா! அவனை இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டும். அவனுக்கு எப்படியாவது உபாத்தியாயரிடத்தில் இரண்டு அடி வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன்.

அப்படியே, ஒருநாள் கோபாலன் அகப்பட்டுக்கொண்டான். நான் வெகு சந்தோஷமாய் விரைந்து சென்று உபாத்தியாயரிடத்தில் 'ஐயா! கோபாலன் படியாமல் சும்மா விளையாடிக்கொண்டிருக்கிறான்' என்று சொன்னேன். அப்பொழுது உபாத்தியாயர், 'அது உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டார். அதற்கு நான், 'அவன் விளையாடிக்கொண்டிருந்ததை நான் என் கண்ணால் பார்த்தேன்' என்றேன். அதற்கு அவர், 'ஆம், வெகு சந்தோஷம். நீ பார்த்தது மெய்தான்.

ஆனால் நீ அவனைப் பார்த்தபோது உன் கண் உன் புஸ்தகத்தைப் பார்த்ததா? உன் கவனம் எங்கேயிருந்தது?' என்று கேட்டார்.

நான் பதில் சொல்ல வழியில்லாமல் திரு கத் திருக விழித்தேன். இவ்விதமாக நானே அகப்பட்டுக்கொண்டேன். என் வகுப்புப்பிள்ளை கள் யாவரும் என்னைப் பார்த்துச் சிரிக்க ஆரம் பித்துவிட்டார்கள். அதுமுதல் நான் கோள் சொல்வதைக் கட்டோடே விட்டுவிட்டு கிரம மாகப் படிக்க ஆரம்பித்தேன். அதனால் நான் கல்வியில் சீக்கிரம் விர்த்தியடைந்தேன்.

மற்றவர்கள்மேல் குற்றம் சொல்லிக் காலங்கழிப் பதைவிட நம்மைச் சீர்ப்படுத்திக்கொள்வோ மானால், நாம் சீக்கிரம் முன்னுக்கு வரலாம்.

## அப்பியாசம்

1. இந்தப் பாடத்தை மௌனமாகப் படி.

2. இந்தக் கதையிலிருந்து நீ கற்றுக்கொள்ளும் படிப்பினை என்ன?

3. பழமொழி என்றால் என்ன? இக்கதையில் வரும் பழமொழியைச் சொல்லு. உனக்குத் தெரிந்த இன்னும் ஏதாவது மூன்று பழமொழிகள் சொல்லு.

4. இவற்றிற்கு அதே பொருள் உள்ள வேறு வார்த் தைகள் சொல்லு:

கட்டளை, தீர்மானம், சும்மா, கோள், திருகத் திருக.

5. பிள்ளைகளே, நீங்கள் சோம்பலாய் இராதீர்கள். இவ்வாக்கியத்தை ஒருமையில் எழுது.

6. அவன் விளையாடிக்கொண்டிருந்தான். ஆகையால் அவன் படிக்கவில்லை. இவ்விரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்கு.

# 15. பயனற்றவை

| | | |
|---|---|---|
| ஆபத்து | பெண்டீர் | தீர்த்தம் |
| அரும்பசி | வேந்தன் | பயன் |
| தாபம் | குருமொழி | உதவா |
| தீரா | சீடன் | அடக்கா |

ஆபத்துக்கு உதவாப் பிள்ளை
அரும்பசிக்கு உதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழும் தானே.

(விவேகசிந்தாமணி)

அப்பியாசம்

1. இச்செய்யுள் மனப்பாடமாய்த் தெரியவேண்டும்.

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:

அன்னம், வேந்தன், தீர்த்தம்.

3. பயனற்றவை—இதின் ஒருமை என்ன?

4. அன்னம் என்னும் வார்த்தையில் எத்தனை அசைகள்? எத்தனை எழுத்துக்கள்? அவற்றில் உயிர் எழுத்து எது? மெய்யெழுத்து எது? உயிர்மெய்யெழுத்து எது?

5. தமிழில் உயிர் எழுத்துக்கள் எத்தனை? வரிசையாய்ச் சொல்லு.

6. மெய்யெழுத்துக்கள் எத்தனை? அவற்றிற்கு ஏற்பட்ட அடையாளம் என்ன? அவற்றைத் தனியாய் உச்சரிக்க முடியுமா? ஏன்? அ என்னும் உயிரைச் சேர்த்து அவற்றைச் சொல்லு. மேய் என்றால் என்ன அர்த்தம்?

7. உயிர்மெய்யெழுத்துக்கள் எத்தனை? அவற்றிற்கு ஏன் உயிர்மெய்யெழுத்துக்கள் என்று பெயர்?



# 16. புத்திசாலிப் பையன்

| | |
|---|---|
| புத்திசாலி | நிறுத்து |
| வீசை | மடியில் |
| சம்மதித்தான் | திடுக்கிட்டு |

ஒரு சிறு பையன் ஒருநாள் சர்க்கரை வாங்கக் கடைக்குப் போனான். போய், கடைக்காரனிடம் ஒரு வீசை சர்க்கரையின் விலையைக் கேட்டான். அவன் 'வீசை சர்க்கரை ஆறு அணா' என்றான். பையன் அதற்குச் சம்மதித்தான். கடைக்காரன் சர்க்கரையை நிறுத்து ஒரு காகிதப் பையில் கட்டிப் பையனிடத்தில் கொடுத்தான். கடைக்காரன் சர்க்கரையை நிறுக்கும்பொழுது பையன் வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் சர்க்கரையைச் சரியானபடி நிறுக்கவில்லை என்று பையன் கண்டு, கடைக்

காரனைப் பார்த்து 'ஐயா! இதென்ன? சர்க்கரை ஒரு வீசைக்குக் குறைவாயிருக்கின்றதே' என்றான். அதற்குக் கடைக்காரன் 'குறைவாயிருந்தால் எடுத்துக்கொண்டுபோகக் கஷ்டம் இராது' என்றான். பையன் சரி என்று சொல்லி மடியில் இருந்த பணத்தில் ஐந்து அணா எண்ணிக் கடைக்காரனிடம் கொடுத்தான். கடைக்காரன் திடுக்கிட்டு 'இதென்ன? பணம் குறைகிறதே' என்றான். அதற்கு அச்சிறுவன் 'குறைவாயிருந்தால் எண்ணுவதற்குக் கஷ்டம் உண்டாகாது' என்றான்.

கடைக்காரன் வெட்கமடைந்து சர்க்கரையைச் சரியாக நிறுத்துக்கொடுத்தான்.

அப்பியாசம்

1. வீசை என்றால் எத்தனை பலம்? எத்தனை ரூபாய் எடை?

2. நிறுக்கிறதற்கு என்னென்ன கருவிகள் வேண்டும்?

3. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:
புத்திசாலி, குறைவு, சரி.

4. பாடத்தின் முதல் வாக்கியத்திலிருக்கும் பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

5. அந்த வாக்கியத்தில் எழுவாய் எது? பயனிலை எது?

6. "ஒரு சிறு பையன்" என்பதற்குப் பதிலாக "சில சிறு பையன்கள்" என்று ஆரம்பித்தால் அந்த வாக்கியம் எப்படி முடியும்?

# 17. திருட்டுப் பையன்

| | | |
|---|---|---|
| சத்திரம் | கிருபை | சிகரெட்டு |
| யாசகம் | மன்றாடினான் | துக்கப்பட்டு |
| யாத்திரை | மனதிரங்கி | தெரிவித்தார் |

மதுரையில் மங்கம்மாள் சத்திரம் என்று ஒரு பெரிய சத்திரம் இருக்கிறது. அந்தச் சத்திரத்தில் இராமேசுவர யாத்திரைக்குப் போகிற பிரயாணிகளில் அநேகர் தங்குவார்கள். அவர்களிடம் யாசகம் கேட்கப் பல ஏழைகள் வருவது வழக்கம்.

சில வருஷங்களுக்குமுன், ஒரு சிறு பையன் அங்குத் தங்கியிருந்த ஒரு பெரியவரிடம் சென்று, 'ஐயா! நான் ஏழை, எனக்குக் கல்வி கற்றுக்கொள்ள வெகு ஆசை, எனக்குப் புத்தகம் வாங்கவும் சம்பளம் கொடுக்கவும் சக்தி இல்லை; தாங்கள் கிருபை செய்து எனக்கு ஏதாவது உதவிசெய்ய வேண்டும்' என்று மன்றாடினான். அவர் மனதிரங்கி, தன் பையிலிருந்து கால் ரூபாய் எடுத்துக் கொடுத்தார். இவ்வாறே அங்குத் தங்கியிருந்த மற்றப் பிரயாணிகளிடத்திலும் கேட்டு அந்தப் பையன் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டான்.

மறுநாள் காலையில் பெரியவர் அப்பையனைக் கடைத்தெருவில் கண்டார். அங்கே அவன் சில சோம்பேறிப் பையன்களுடன் நின்றான். அவன் வாயில் சிகரெட்டும், கையில் தின்பண்டங்களும் இருந்தன. இதைப்பார்த்துப் பெரியவர் துக்கப்பட்டு, பையனைக் கூப்பிட்டார். அவன் ஓடிப்போய்விட்டான். பெரியவர், அவன் திருட்டுப் பையன் என்று அறிந்துகொண்டு சத்திரத்

தில் இருந்த மற்றவர்களிடத்தில் சங்கதியைத் தெரிவித்தார். அப்பொழுது பக்கத்தில் நின்ற ஒருவர் அந்தப் பையனைத் தனக்குத் தெரியும் என்றும், அவன் பெற்றோருக்குக் கீழ்ப்படியாத திருட்டுப் பையன் என்றும் சொன்னார். அதுமுதல் அவனை ஒருவரும் நம்புகிறதில்லை. அவன் பெரியவன் ஆனபோது அதிகக் கஷ்டப்பட்டான்.

## அப்பியாசம்

1. இராமேசுவரத்துக்கு ஏன் பலர் யாத்திரை பண்ணுகிறார்கள்?

2. சென்னை இராஜதானி படத்தில் மதுரையையும் இராமேசுவரத்தையும் காட்டு.

3. யாசகம், யாத்திரை, மன்றாடினான்—இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு.

4. எனக்குப் புத்தகம் வாங்கவும் சம்பளங் கொடுக்கவும் சக்தி இல்லை. இதை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

5. "பெரியவர் பையனைக் கூப்பிட்டார்." இது முற்றுப்பெற்ற அர்த்தத்தையுடைய ஒரு வாக்கியம். இதில் கூப்பிட்டார் என்னும் வார்த்தை செயலைக் காட்டுகிறது. இது பயனிலை எனப்படும்.

யார் கூப்பிட்டார் என்னும் கேள்விக்குப் பெரியவர் என்பது விடையாகும். பெரியவர் என்னும் இந்த விடை எழுவாய் எனப்படும்.

யாரைக் கூப்பிட்டார் என்னும் கேள்விக்குப் பையனை என்பது விடையாகும். பையனை என்னும் இந்த விடை செயப்படுபொருள் எனப்படும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், இம்மூன்றும் ஒரு வாக்கியத்தின் உறுப்புகள் ஆகும்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய இவற்றை எடுத்துச் சொல்லு.

(1) பையன் யாசகம் கேட்டான்.

(2) பெரியவர் கால்ரூபாய் கொடுத்தார்.

(3) பெரியவர் பையனைத் தெருவில் கண்டார்.

# 18. நான் எதைச் செய்வேன்?

| | |
|---|---|
| மரியாதை | கிரமமாய் |
| ஏதாவது | தொழுவேன் |

1. நான் என் தாயாருக்கும் தகப்பனுருக்கும் கீழ்ப்படிந்து நடப்பேன்.

2. என் தாயாரையும் தகப்பனுரையும் சிநேகிப்பேன்.

3. என் சகோதரரிடத்தில் அன்புள்ளவனுயிருப்பேன்.

4. எனக்கு மூத்தவர்களிடத்தில் மரியாதையாய் நடந்துகொள்வேன்.

5. என் குருவையும் உபாத்தியாயரையும் கனம் பண்ணுவேன்.

6. எல்லாரிடத்திலும் மரியாதையாய்ப் பேசுவேன்.

7. என் உடம்பையும் துணியையும் சுத்தமாய் வைத்துக்கொள்வேன்.

8. எப்பொழுதும் ஏதாவது ஒரு நல்ல உபயோகமான வேலையைச் செய்துகொண்டிருப்பேன்.

9. கோவிலுக்குக் கிரமமாய்ப் போய் வணக்கமாய்க் கடவுளைத் தொழுவேன்.

10. எப்பொழுதும் உண்மையையே பேசுவேன்.

## அப்பியாசம்

1. பின்வரும் ஜதை ஜதையான வார்த்தைகளுக்கு ஒரே வார்த்தை சொல்லு:

(1) தாய், தகப்பன். (2) அண்ணன், தம்பி (3) அக்காள், தங்கை.

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகள் வைத்து வாசி:

(1) எல்லாரிடத்திலும் —— யாய்ப் பேசுவேன்.

(2) என் —— யும் —— யும் சுத்தமாய் வைத்துக்கொள்வேன்.

(3) எப்பொழுதும் —— யே பேசுவேன்.

3. "நான் என் குருவையும் உபாத்தியாயரையும் கனம்பண்ணுவேன்." இவ்வாக்கியத்தில், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துச் சொல்லு. இதில் காணப்படும் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்துக்களையும் எடுத்து எழுது.

4. "நான் எதைச் செய்வேன்?" இதுவும் முற்றுப் பெற்ற அர்த்தத்தையுடைய ஒரு வாக்கியம்தான். ஆனால் இது கேள்வி வாக்கியம். ஆகையால் இதன் கடைசியில் முற்றுப்புள்ளி வைக்காமல் கேள்விக்குறி (?) இடவேண்டும்.

# 19. நான் எதைச் செய்ய மாட்டேன்?

| | |
|---|---|
| உயிர்ப்பிராணி | பீடி |
| வதைக்க | கள் |
| வீணாய் | சாராயம் |
| கைத்தொழில் | அருவருப்பு |
| அவமதிக்க | இடையூறு |

1. நான் பொய் சொல்லமாட்டேன்.

2. நான் மற்றவர்கள் பொருளுக்கு ஆசைப படமாட்டேன்.

3. நான் மற்றவர்களைப்பற்றிக் கெடுதலாய்ப் பேசமாட்டேன்.

4. பெரியவர்களை எதிர்த்துப் பேசமாட்டேன்.

5. எனக்குத் தாழ்ந்தவர்களையும் அங்கவீன முள்ளவர்களையும் கேலி பண்ணமாட்டேன்.

6. உயிர்ப் பிராணிகளை வதைக்கமாட்டேன்.

7. என் நேரத்தை வீணாய்க் கழிக்க மாட்டேன்.

8. கைத்தொழிலை அவமதிக்க மாட்டேன்.

9. பீடி, சிகரெட்டு, கள், சாராயம் முதலிய அருவருப்பான பொருள்களை உபயோகப்படுத்த மாட்டேன்.

10. பொதுக் கூட்டங்களிலும், சபைகளிலும் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படும்படி நடந்து கொள்ள மாட்டேன்.

அப்பியாசம்

1. நாம் உபயோகிக்கத்தகாத அருவருப்பான பொருள்களில் சிலவற்றைச் சொல்லு.

2. பொதுக் கூட்டங்களில் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?

3. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

வதைக்க, கழிக்க, அவமதிக்க, கேலிபண்ண.

4. இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:

பொய், பெரியவர், மூத்தவர், தாழ்ந்தவர்.

5. "கைத்தொழிலை அவமதிக்கமாட்டேன்." இதில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் சொல்லு. இங்கே நான் என்னும் எழுவாய் தோன்றுமல் மறைந்திருக்கிறது. அதற்குத் தோன்ரு எழுவாய் என்று பெயர்.

## 20. வாழைமரம்

| | | |
|---|---|---|
| முந்திரிகைப்பழம் | பட்டை | செவ்வாழை |
| விடை | மட்டை | திரட்சி |
| பயிராகின்ற | சுலபமாய் | அழுகின |
| அறுத்து | இரசதாளி | தண்டு |
| குந்தியிருப்பது | மொந்தன் | நார் |
| விதை | கதலி | தொடுக்கலாம் |
| கிழங்கு | பேயன் | திரிக்கலாம் |
| பசுமை | பச்சைவாழை | மங்களகரம் |

கொட்டையில்லாப் பழம் என்ன பழம்? என்று ஒருநாள் சிங்காரம் என்னும் சிறுவன் தன்னுடன் படிக்கும் சிறுவர்களைக் கேட்டான். பிள்ளைகள்



யாவரும் சற்று யோசித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிகாமணி என்பவன் 'முந்திரி கைப்பழம்' என்று வெகு அவசரமாய் விடை கூறினன்.

"கொடிமுந்திரிகைப் பழத்துக்குக் கொட்டை யில்லையா!" என்றான் சிங்காரம்.

உடனே, சிகாமணி, "நான் கொடிமுந்திரி கைப் பழத்தைப்பற்றிப் பேசவில்லை. காடுகளில் பயிராகின்ற முந்திரிகை மரத்தினின்று கிடைக்கும் முந்திரிகைப் பழத்தை அறுத்துப்பார்" என்றான்.

"வெகு நேர்த்தி; முந்திரிகைப் பழத்தை அறுத் துப் பார்த்தால் அதற்குள் கொட்டை இராது

என்பது சரியே. ஆனால் அப்பழத்தின் தலை மேல் குரங்குபோல் கொட்டை குந்தியிருப்பதைப் பார்த்ததில்லையா? முந்திரிகைப் பழத்தைவிட அதன் கொட்டையை யல்லவா யாவரும் விரும்பு வார்கள்” என்று சிங்காரம் சொன்னான்.

சற்றுநேரம் ஆனபிறகு, 'கொட்டையில்லாப் பழம் வாழைப்பழம்' என்று மற்றொரு சிறு வன் சொன்னான். அப்படியானால் வாழைமரம் எப்படிப் பயிராகும் என்று இன்னொருவன் கேட் டான்.

உடனே அவர்கள் எல்லோரும் தோட்டத் துக்குப் போய் வாழைமரம் பயிராகும் விதத் தையும், அதன் உபயோகங்களையும் அறிந்து கொண்டு சந்தோஷமாய்த் திரும்பிவந்தார்கள்.

வாழைமரத்துக்கு விதையில்லை. வாழை மரத் தைச் சுற்றிலும் அடியில் இருக்கும் கிழங்கி லிருந்து பல கன்றுகள் வெடிக்கும். அக்கன்று களைத் தோண்டி எடுத்து வேறு இடங்களில் நட்டுப் பயிராக்குவார்கள். வாழைமரம் பார்ப்ப தற்கு வெகு அழகாயிருக்கும். பெரிய இலைகள் விடும். நீளமும் அகலமுமான இலைகள் மட்டை மட்டையாகச் சுற்றிலும் இருக்கும். அதற்குக் கிளைகள் இல்லை. பசுமையான பல பட்டைகள் ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கப்பட்டு நீண்டு உருண்டு அழகாய் வளர்ந்து நிற்கும்.

சிறு பிள்ளைகளுக்கு வாழைப்பழம் தின்பது மிகப் பிரியம். அது வாய்க்கு மெதுவாய் இருக்கும். தின்பதற்குத் தித்திப்பாயும் ருசியாயும்

13395

இருக்கும். பழத்தில் கொட்டை இல்லாதிருப்ப தால் சுலபமாய்ச் சாப்பிடலாம்.

வாழைப்பழங்களில் பலவிதம் உண்டு. சில மஞ்சள் நிறமாயும், சில சாம்பல் நிறம்கலந்த மஞ் சள் நிறமாயும், சில பச்சை நிறமாயும், இன்னும் சில சிவப்பாயும் இருக்கும். இரசதாளி, மொந்தன், கதலி முதலிய பழங்கள் மஞ்சள் நிறம்; பேயன் பழம் சாம்பல் நிறம் கலந்த மஞ்சள் நிறம்; பச்சை வாழைப்பழம் பச்சை நிறம்; செவ்வாழைப்பழம் சிவப்பு நிறம்.

வாழைப்பழம் சீப்பு சீப்பாய் இருக்கும். ஒரு வாழைக்குலையில் பல சீப்புகள் உண்டு. சில ஜாதிப்பழங்கள் பேரிதாயும் சில ஜாதிப்பழங்கள் சிறிதாயும் இருக்கும். வாழைப்பழம் கிச்சிலிப் பழத்தைப்போல் உருண்டையாய் இராமல் திரட்சி யாயும் சற்று நீளமாயும் இருக்கும். சாதத்துட னுவது, சாதம் சாப்பிட்ட பின்னுவது, வாழைப் பழம் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது. அழு கின பழங்களையும் நன்ருய்ப் பழுக்காத பழங்களை யும் சாப்பிடக்கூடாது.

ஒரு வாழைமரம் ஒரே குலைதான் தள்ளும். அதன் பூ, காய், தண்டு இவை யாவையும் பல விதமாகச் சமைத்துச் சாப்பிடலாம். வாழை இலையும், வாழைப்பட்டையும் சாப்பிடும் பாத்திர மாக உபயோகப்படுகின்றன. வாழை நாரைக் கொண்டு பூமாலை தொடுக்கலாம்; கயிறு திரிக்க லாம்; துணியும் நெய்யலாம். கலியாணம் முதலிய மங்களகரமான விசேஷ நாட்களில் வாழைமரங் களைக் குலைகளோடு கொண்டுவந்து, தூண்களி லும் பந்தல் கால்களிலும் கட்டுவார்கள்.

அப்பியாசம்

1. வாழைமரம் பயிரிடும் விதம் எப்படி?

2. ஒரு வாழைமரம் எத்தனை குலை தள்ளும்?

3. அதன் இலை, பூ, காய், தண்டு, பழம், பட்டை இவை ஒவ்வொன்றும் எப்படி உபயோகப்படுகிறது?

4. வாழைப்பழங்களில் பல ஜாதிகள் உண்டு. சிலவற்றைக் கூறு.

5. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தை வைத்து வாசி:

மொந்தன்பழம் —— நிறம்; பேயன்பழம் —— நிறம் கலந்த —— நிறம்; செவ்வாழைப்பழம் —— நிறம்.

6. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு.

குந்தி, தித்திப்பு, சுலபம், சாதம், அழுகின, மங்களகரமான.

7. இவ்வாக்கியங்களின் முடிவில் வைக்கவேண்டிய புள்ளி அல்லது குறியை வைத்து எழுது:

"கொட்டையில்லாப்பழம் என்ன பழம் கொட்டையில்லாப்பழம் வாழைப்பழம்"

# 21. சுடாத பழம்

| | | |
|---|---|---|
| பெயர் பெற்றவள் | நாவல் மரம் | கனிந்த |
| அன்றுடக | களைப்பு | கனியாத |
| கூழுக்குப்பாடி | தோன்றாமல் | வெந்து |
| களஞ்சியம் | குலுக்கினான் | ஆறின |
| மடக்கிவிட்டான் | ஊதினாள் | கருத்து |

அநேகமாய் நமது தமிழ் நாட்டில் உள்ள எல்லாருக்கும் ஔவையாரைப்பற்றித் தெரியும். பெண்களுக்குள் ஔவையாரைப்போல் கல்விகற்றவர்கள் ஒருவரும் இல்லை. ஔவை பாட்டுப் பாடுவதில்

பெயர் பெற்றவள். அநேக பாடல்கள் பாடியிருக்கிருள். இக்காலத்திலும் ஔவையார் பாடின பாடல்கள் மிகவும் மேன்மையாக மதிக்கப்பட்டு வருகின்றன.

ஔவை கல்வியில் சிறந்தவளாயிருந்தபோதிலும், அன்ருடக ஜீவனத்திற்கு வழியில்லாத ஏழையாயிருந்தாள். பசி பொறுக்கமாட்டாமல் பல வீடுகளுக்குப்போய்ப் பிச்சை வாங்கிச் சாப்பிடுவாள். பசிவேளைக்கு யாராவது ஒரு கை கூழ் கொடுத்தால்கூட அதற்கு நன்றி பாராட்ட ஒரு பாட்டைப் பாடுவாள். அதனுல், ஔவையைக் கூழுக்குப்பாடி என்பார்கள்.

கல்விக் களஞ்சியமான ஔவையை ஒரு தடவை மாட்டுக்காரப் பையன் ஒருவன் ஒரு சிறு கேள்வி கேட்டு மடக்கிவிட்டான். ஒருநாள் அந்த அம்மை காடுகளும் மலைகளும் அடர்ந்த மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்தாள். அங்கு மாடு மேய்க்கிற சிறுவன் ஒருவன் ஒரு நாவல் மரத்தின் மேல் ஏறிப் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தான். ஔவை அதிகக் களைப்போடு வந்து அந்த மரத்தடியில் உட்கார்ந்தாள். அங்கு மரத்தின்மேல் இருந்த மாட்டுக்காரப் பையனைப் பார்த்து, 'தம்பீ! எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது, தயவுசெய்து சில நாவல் பழங்கள் பறித்துப்போடு' என்று வேண்டிக்கொண்டாள். அதற்குப் பையன், 'ஓ! கிழவியே! உனக்குச் சுடுகிற பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்டான். ஔவை ஆச்சரியப்பட்டு நாவற்பழத்தில் சுடுகிற பழமும் இருக்குமா என்று கொஞ்சநேரம் யோசித்துக்கொண்டு நின்ருள்.

பின்பு ஒன்றும் தோன்ருமல், 'அப்பா! சுடுகிற பழம் எனக்கு வேண்டாம், சுடாத பழமே வேண்டும்' என்ருள்.

உடனே பையன், பழங்கள் நிறைந்த ஒரு கிளையைப் பிடித்துப் பலமாய்க் குலுக்கினுன். அதிலிருந்து கனிந்த பழங்களும், கனியாத பழங்களும் கீழே தபதபவென்று விழுந்தன. அப்பொழுது ஔவை, கனிந்த பழங்களில் சிலவற்றைப் பொறுக்கி, அவைகளில் தரையிலிருந்த மணல் ஒட்டிக்கொண்டிருந்தபடியால், வாயினுல் ஊதினுள். அதைப்பார்த்து மாட்டுக்காரப் பையன், 'ஓ! கிழவி! நீ சுடாத பழம் கேட்டுவிட்டு, சுடுகிற பழத்தைத் தின்னப்போகிருயோ? வாய் வெந்துவிடப் போகிறது, நன்ருய் ஊதி ஆறினபின் சாப்பிடு' என்ருன். அப்பொழுது ஔவை, சுடாத பழம் காய் என்று தெரிந்துகொண்டு, இந்தக் கருத்து தனக்கு முன்னமே தெரியாமற் போயிற்றே என்று வெட்கம் அடைந்தாள்.

## அப்பியாசம்

1. இக்கதையை மௌனமாகப் படித்து, பின்பு சொல்லு.

2. ஔவையை ஏன் "கல்விக்களஞ்சியம்" என்றும் "கூழுக்குப்பாடி" என்றும் அழைக்கிருர்கள்?

3. சுட்ட பழம் எது? சுடாத பழம் எது?

4. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:

ஏழை, ஏறி, வேண்டாம், கனிந்த.

5. "கனிந்த பழங்களில் மணல் ஒட்டிக்கொண்டிருந்தபடியால் ஔவை வாயினுல் ஊதினுள்." இதை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது. அவற்றின் எழுவாய் பயனிலைகளையும் எடுத்து எழுது.



# 22. பெரிய பழம்

| | | |
|---|---|---|
| அத்திப்பழம் | பனம்பழம் | கிழவர் |
| எலுமிச்சம்பழம் | பலாப்பழம் | நரைத்த |
| விளாம்பழம் | பழுத்தபழம் | அமிர்தம் |

தம்பீ, தம்பீ, எந்தப் பழம் பெரிய பழம்?

அண்ணு, நாவல் பழம் பெரிய பழம்.

அல்ல, அல்ல, நாவல் பழம் சிறிது; நாவல் பழத்திலும் எது பெரிது?

நாவல் பழத்திலும் பெரிது அத்திப்பழம்.

அத்திப் பழத்திலும் எது பெரிது?

அத்திப் பழத்திலும் பெரிது எலுமிச்சம் பழம்.

எலுமிச்சம் பழத்திலும் எது பெரிது?

எலுமிச்சம் பழத்திலும் பெரிது விளாம் பழம்.

விளாம் பழத்திலும் எது பெரிது?

விளாம் பழத்திலும் பெரிது மாம்பழம்.

மாம் பழத்திலும் எது பெரிது?

மாம் பழத்திலும் பெரிது பனம்பழம்.

பனம் பழத்திலும் எது பெரிது?

பனம் பழத்திலும் பெரிது பலாப்பழம்.

பலாப் பழத்திலும் எது பெரிது?

ஏன் அண்ணு, மேலே மேலே கேட்கிறீர்கள்? பலாப்பழத்திலும் பெரிய பழம் இன்ன பழம் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆம், சரிதான். அது உனக்குத் தெரியாது. நான் சொல்லுகிறேன் கேள். சாதாரணமாய் அதிக வயதுசென்ற கிழவர்களைப் 'பழுத்த பழங்கள்' என்று சொல்லுவார்கள். ஆகையால் வயது சென்ற நரைத்த மனிதனை எல்லாப் பழங்களிலும் பெரிய பழம் என்று சொல்லலாம்.

இனிய பழங்களைப் பார்க்கிலும், மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தமாம்.

அப்பியாசம்

1. பனம்பழத்துக்கும் பலாப்பழத்துக்கும் என்ன வித்தியாசம்?

2. எப்பேர்ப்பட்ட மனிதனைப் பழுத்த பழம் என்று சொல்வார்கள்?

3. வயதுசென்ற மனிதன் என்பதற்கு ஒரே வார்த்தை என்ன?

4. கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்:

| ஆண் | பெண் |
|---|---|
| மனுஷன் | —— |
| கிழவன் | —— |
| தலைவன் | —— |
| செவிடன் | —— |
| குருடன் | —— |
| பாட்டன் | —— |

5. இனிய பழங்களைப் பார்க்கிலும் எது அமிர்தமாக எண்ணப்படுகிறது?

# 23. திசைகள்

| | |
|---|---|
| அமாவாசை | கிழக்கு |
| பழையது | மேற்கு |
| உஷ்ணம் | தெற்கு |
| மாலை | வடக்கு |

சுந்தரம் என்னும் சிறுவன் பள்ளிக்கூடத்துக்குப் போகும்பொழுது தன் தோழனாகிய கோவிந்தனைக் கூட்டிக்கொண்டு போவது வழக்கம். ஒரு நாள் காலையில் சுந்தரம் வரும்போது கோவிந்தன் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது சுந்தரம், 'கோவிந்தா! கோவிந்தா!' என்று



வெளியே நின்று கூப்பிட்டு, 'இன்றைக்கு அமாவாசை, அரைநாள் பள்ளிக்கூடம்; காலை எழு மணிக்குப் பள்ளிக்கூடம் தொடங்கும் என்று உனக்குத் தெரியாதா? பொழுது விடிந்து சூரியன் மேலே வந்துவிட்டதே' என்ருன். கோவிந்தன் திடுக்கிட்டுத் திடீரென்று எழுந்து ஓடிவந்து சூரியனிருக்கும் திசையை நோக்கிச் சென்று சூரியனைப் பார்த்தான். அவன் மற்ற எந்தப் பக்கத்திலும் எட்டிப் பார்க்காமல் சூரியன் இருக்கும் பக்கத்தையே நோக்கிப் பார்த்தான். ஏனென்ருல், அவனுக்கு அதிகாலையில் சூரியன் இன்ன திசையில் இருக்கும் என்று தெரியும். காலையில் சூரியன் தோன்றும் திசைக்குக் கிழக்கு என்பது பெயர்.

கோவிந்தன் அவசரமாய்ப் பல் துலக்கி, முகங்கழுவி, பழையது சாப்பிட்டான். பின்பு இருவரும் பள்ளிக்கூடத்துக்குப்போய்த் திரும்பி வந்தார்கள். திரும்பி வரும்பொழுது சுமார் பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. அப்பொழுது கோவிந்தன், 'சூரியன் எவ்வளவு மேலே வந்து விட்டது, அதிக உஷ்ணமாயிருக்கிறது' என்

ருன். அதன்பின்பு இருவரும் அவரவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள். அன்று மாலை பள்ளிக்கூடம் இல்லாததால் சுமார் ஐந்து மணிக்கு அவர்கள் இருவரும் வெளியே உலாவப் புறப்பட்டார்கள். அப்பொழுது சூரியன் காலையில் காணப்பட்ட திசைக்கு நேரே எதிரில் இருந்தது. முகத்தில் வெயில் படாதிருக்கும்படி, சிறுவர் இருவரும் கிழக்கு முகமாய் உலாவப் போனார்கள். அவர்கள் வீட்டுக்குத் திரும்புவதற்குள் சூரியன் மறைந்துவிட்டது. சூரியன் மாலையில் மறையும் திசைக்கு மேற்கு என்று பெயர்.

நாம் சூரியனைக் காலையில் ஓரிடத்திலும், மாலையில் வேறிடத்திலும் பார்க்கிறோம். நீ சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நின்றால் உன் முகம் கிழக்குப் பக்கமாக இருக்கும்; உன் முதுகு மேற்குப் பக்கமாக இருக்கும். உன் வலது கை தெற்குப் பக்கமாக இருக்கும். இடது கை வடக்குப் பக்கமாக இருக்கும். நாம் எந்த இடத்துக்குப் போனாலும் நான்கு திசைகள் இருக்கும். அவைகளுக்குக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பது பெயர். நாம் சூரியனைப் பார்த்து இலேசாய்த் திசைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

அப்பியாசம்

1. திசை தெரிந்துகொள்ளும் விதம் எப்படி?
2. எத்தனை திசைகள் உண்டு?
3. அமாவாசை என்றால் என்ன?
4. இவற்றிற்கு வேறு பதங்கள் சொல்லு:

தொடங்கும், உதிக்கும், மாலை, உஷ்ணம், துவக்கி, சுமார், பொழுது.

5. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:

வலது, மாலே, வெளியே, பழையது.

6. "நாம் சூரியனைக் காலையில் ஓர் இடத்திலும் மாலையில் ஓர் இடத்திலும் பார்க்கிறோம்."

இவ்வாக்கியத்தில் எழுவாய் எது, பயனிலை எது, செயப்படுபொருள் எதுவென்று எழுது. இதிலிருக்கும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

7. பூகோளப் படத்தில் திசைகள் காட்டியிருக்கும் விதம் எப்படி?

# 24. வழியே ஏகுக வழியே மீளுக

| | | |
|---|---|---|
| ஏகுக | தாமரை | சூரியாஸ்தமனம் |
| மீளுக | நந்தவனம் | முன்னிருட்டு |
| முதலியார் | சிற்றருவி | குறுக்குப்பாதை |
| சீமான் | ஓடை | ஜனசஞ்சாரம் |
| நிலபுலங்கள் | மகிழ்ச்சி | துஷ்டர் |
| அணிகலங்கள் | நறுமணம் | சீர்கேடு |
| மைல் | சுவாசித்து | நேர்ந்திராது |
| பூர்வீக | தியானித்து | வருந்தினர் |

சோழவள நாட்டில் சோமசுந்தர முதலியார் என்று ஒரு சீமான் இருந்தார். அவருக்குப் பல வித நில புலங்களும், விலையுயர்ந்த அணிகலங்களும், மட்டற்ற ஆடு மாடுகளும் இருந்தன. அவர் வீட்டிற்கு அடுத்த மூன்றாவது மைலில் அவருக்குச் சொந்தமான பூர்வீகத்தோட்டம் ஒன்றிருந்தது. அத்தோட்டத்துக்குப் போகும் வழியில் குளிர்ச்சி தரத்தக்க அழகிய சிறு சோலை

களும், தாமரை நிறைந்த குளங்களும் பல இருந் தன.

ஒரு நாள் மாலைப்போதில் அவர் தமது அழகிய நந்தவனத்தைப் பார்த்து வரும்படி வெகு உல்லாசமாய்ப் புறப்பட்டார். வழியில் குறுக்கிடும் சிற்றருவிகளையும் ஓடைகளையும் கண்டு களிப் படைந்தார். திவ்ய மதுரமுள்ள கனிவர்க்கங்கள் மரங்களில் பழுத்துத் தொங்குவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். ஆகாயத்தில் கலந்து வீசின வாசனையுள்ள புஷ்பங்களின் நறுமணத்தைச் சுவாசித்து, கடவுளைத் துதிசெய்தார். இயற் கையின் அதிசயங்களையும் வல்லமைகளையும் தியானித்துக்கொண் டிருந்தமையால் தன்னையே மறந்து சூரியாஸ்தமனம் வரையில் தோட்டத்தி லேயே யிருந்துவிட்டார்.

இருள் வந்து சூழவே வீட்டிற்குத் திரும்ப வேண்டுமென்று நினைத்தார். வீடு தூரமாயிருந்த படியாலும், முன்னிருட்டு வந்து கூடினபடியா லும், முன் வந்தவழியே வீட்டிற்குத் திரும்பாது குறுக்குப் பாதையாகப் போகும்படி தீர்மானித் தார். ஜன சஞ்சாரமில்லாத அந்தக் குறுக்குப் பாதையருகே துஷ்டர்கள் அநேகர் வாசஞ்செய் தார்கள். முதலியாரை இருளில் தனியே கண்ட அம்மூர்க்கர்கள் அவர்மீது விழுந்து, அவர் அணிந்திருந்த ஆபரணங்களையும் கையில் வைத் திருந்த நாணயங்களையும் பறித்துக்கொண்டு ஓடிப் போய்விட்டார்கள். அப்பொழுது அந்தச் சீமான், 'ஐயோ, "வழியே ஏகுக வழியே மீளுக"— என்று பெரியோர் கூறியபடி, நான் வந்தவழியே திரும்பியிருந்தால், இவ்வித சீர்கேடு நேர்ந் திராதே' என்று வருந்தினர்.

அப்பியாசம்

1. சோழநாடு என்பது எது? இந்த ஊர் சோழ நாட்டைச் சேர்ந்ததா இல்லையா?

2. சோமசுந்தர முதலியார் தோட்டத்துக்குப் போகும் வழியில் என்னென்ன விசேஷங்களைப் பார்த்தார்?

3. இருட்டானபின் குறுக்குப் பாதையாகத் திரும்பினதால் என்ன கெடுதல் நேர்ந்தது?

4. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:

நந்தவனம், நறுமணம், அணிகலம், நிலபுலம், கனிவர்க்கம், ஏகுக, மீளுக.

5. இவ்வாக்கியங்களின் பயனிலை ஒருமையாயிருக்கும்படி அவற்றை மாற்றி எழுது.

(1) பல குளங்கள் இருந்தன.

(2) அநேக துஷ்டர்கள் வாசஞ் செய்தார்கள்.

(3) அம்மூர்க்கர்கள் முதலியாருடைய பணத்தைப் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

6. மைல் இங்கிலிஷ் வார்த்தை. இதற்கும், மயில் என்னும் தமிழ் வார்த்தைக்கும் என்ன வித்தியாசம்?

# 25. எலும்புக்கூடு

| | | |
|---|---|---|
| எலும்புக்கூடு | மண்டை ஓடு | மூளை |
| முண்டம் | கபாலம் | எண்சாண் |
| போர்வை | அழுத்தம் | சிரசு |
| தோல் | வஸ்து | பிரதானம் |

நமது தேகத்தை மூன்று பெரிய பாகங்களாகப் பிரிக்கலாம். முதலாவது தலை, இரண்டாவது உடல் அல்லது முண்டம், மூன்றுவது கை




கால்கள் என்னும் அவயவங்கள். தேகம் முழு வதும் ஒரு போர்வையால் மூடப்பட்டிருக்கிறது. சிலருடைய போர்வை வெண்மையாயும், சிலருடைய போர்வை கறுப்பாயும், சிலருடைய போர்வை பழுப்பு நிறமாயும், வேறு சிலருடைய போர்வை பொது நிறமாயும் இருக்கிறதை நாம் பார்க்கலாம். இந்தப் போர்வைக்குத் தோல் என்றுபெயர்.

தோலை நீக்கிவிட்டால் நமது தேகம் எலும்புகளால் செய்யப்பட்ட ஒரு கூடுபோல் காணப்படும். ஆகையால் அதை எலும்புக்கூடு என்று சொல்லுவார்கள். இந்த எலும்புக் கூட்டினுல்தான் மனுஷனுக்கு ஒரு உருவம் ஏற்படுகிறது. தலை உருண்டும், மார்பு அகன்றும், கழுத்து நீண்டும் இருக்கின்றன. ஏனென்ருல் அந்தந்த இடங்களிலிருக்கும் எலும்புகள் அவ்வித உருவம் அடைந்து இருக்கின்றன.

இவ்வெலும்புகள் இரும்புச் சட்டங்கள் போல மிகவும் உறுதியாயிருக்கின்றன. ஆகையால்தான், நாம் இலகுவாய்க் கால்களைத் தரையில் ஊன்றி நிற்கிருேம். இப்படிப்பட்ட எலும்புகள் இல்லாவிட்டால் நாம் புழுக்களைப்போல் தரையில் ஊர்ந்து திரியவேண்டியதாயிருக்கும்.

நமது தேகத்தில் இருக்கும் எல்லா எலும்புகளிலும் தலையிலிருக்கும் எலும்பே மிகவும் விசேஷமானது. இதற்கு மண்டை ஓடு அல்லது கபாலம் என்று பெயர். இது வெகு அழுத்தமானது. இலகுவாய் இதை உடைக்க முடியாது. இது உருண்டையான ஒரு பெட்டிபோல் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குள் மிகவும் மேன்மையான வஸ்து ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வஸ்துவுக்கு மூளை என்று பெயர். மனுஷனுக்கு இருக்கும் அறிவும், உணர்வும் இம்மூளையினுல்தான் உண்டாகிறது. இவ்வுயர்ந்த வஸ்துவாகிய மூளையைக் காப்பாற்றவே மண்டை ஓடாகிய எலும்புப் பெட்டி பலமான இரும்புப் பெட்டிபோல் அமைக்கப்பட்டிருக்கிறது. எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்.

### அப்பியாசம்

1. விடை கூறு:

1. நமது தேகத்தை எத்தனை பெரிய பாகங்களாகப் பிரிக்கலாம்?

2. தேகம் முழுவதையும் மூடிக்கொண்டிருக்கிற போர்வைக்குப் பெயர் என்ன?

3. மனுஷனுக்கு உருவம் எதினால் ஏற்படுகிறது?

4. எலும்புகள் இல்லாவிட்டால் மனுஷனுடைய நிலைமை எப்படியிருக்கும்?

5. "எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்"—ஏன்?

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:

கபாலம், சிரசு, அவயவங்கள், வஸ்து, பிரதானம்.

3. மூளை, மூலை, எலும்பு, எழும்பு, எறும்பு. இப்பதங்கள் ஒவ்வொன்றையும் உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

4. "சிலருடைய போர்வை வெண்மையாயும், சிலருடைய போர்வை கறுப்பாயும், சிலருடைய போர்வை பழுப்பு நிறமாயும் இருக்கிறது." இதை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுதி முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய இடத்தில் முற்றுப்புள்ளி வை.

## 26. அம்மை

| | | |
|---|---|---|
| கிராம முனிசிபு | கீறி | கொடூரமான |
| தழும்பு | கசிந்து | தொத்துவியாதி |
| புயங்கள் | தேய்த்து | வைசூரி |
| அம்மைப்பால் | நடுநடுங்கி | சர்க்கார் |

"கோபாலா, இன்று காலையில் உங்கள் பள்ளிக் கூடத்துக்கு கிராம முனிசிபும், அம்மை குத்து கிற அதிகாரியும் வந்தார்களே, அது ஏன்?" என்று கோபாலனை அவன் மாமா ஒருநாள் இரவில் கேட்டார்.

"ஆம், மாமா, அம்மை குத்துகிறவர் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொருவருக்கும் அம்மை குத்தியிருக்கிறதா இல்லையா என்று பார்த்தார். எங்கள் வகுப்பில் சங்கரனுக்கும், சாமிநாதனுக்கும், சிங்காரத்துக்கும் கையில் அம்மைத் தழும்புகள் இல்லாதிருந்தன. ஆகையால் அவர்களுக்கு அம்மை குத்தவேண்டும் என்று சொன்னார். உடனே அந்த மூன்றுபேரும் கோவென்று அழுதுவிட்டார்கள். அப்பொழுது உபாத்தியாயர் அவர்கள் வீட்டுக்குச் சொல்லியனுப்பிப் பெற்றோரை வரவழைத்தார். அவர்கள் வந்த பின் அந்த மூன்றுபேருக்கும் பள்ளிக்கூடத்திலேயே அம்மை குத்திவிட்டார்கள்" என்றான் கோபாலன்.

அம்மை குத்துகிறவர் முதலாவது தம்முடைய கையையும் பையன்களுடைய புயங்களையும் நன்றாய்க் கழுவிச் சுத்தம் செய்துகொண்டார். அவரிடத்தில் ஒரு சிறு கூர்மையான கத்தி இருந்தது. அந்தக் கத்தியும் வெகு சுத்தமாயிருந்தது. அவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே ஒவ்வொரு பையனுடைய அடிக்கையையும் பிடித்து அதில் இரண்டு இடங்களில் அம்மைப்பாலைத் தடவிக் கத்தியால் கீறி அங்கே கசிந்துவரும் இரத்தத்துடன் அம்மைப்பால் கலக்கும்படி செய்தார். பின்பு இரத்தம் வெளியே வராமல் கத்திப்பிடியால் அவ்விடங்களைத் தேய்த்துவிட்டார். சிறுவர்

மூவரும் பயந்து, நடுநடுங்கி அழுதுவிட்டார்கள். ஆனால் அம்மை குத்தி முடிந்தபின், வலி ஒன்றும் இல்லை, எறும்பு கடித்தது போல்தான் இருந்தது என்று அம்மூவரும் சொன்னார்கள் என்றும், கோபாலன் பதில் உரைத்தான்.

அம்மை ஒரு கொரேமான தொத்துவியாதி. அதற்கு வைசூரி என்றும் பெயர். அதினால் வருஷா வருஷம் அநேக ஜனங்கள் சாகிறார்கள். ஆனால் அம்மை குத்திக்கொண்டால் வைசூரி வராது; வந்தாலும் இலகுவாய்ச் சுகமாகிவிடும். ஆகையால்தான் யாவரும் அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென்று சர்க்கார் ஏற்பாடு செய் திருக்கிறார்கள்.

அப்பியாசம்

1. விடை கூறு:

1. அம்மை எப்பேர்ப்பட்ட வியாதி?

2. அதற்கு இன்னொரு பெயர் என்ன?

3. அம்மை குத்திக்கொள்வதினால் உண்டாகும் நன்மை என்ன?

2. தொத்துவியாதி என்றால் என்ன? அம்மையைத்தவிர வேறெந்த வியாதிகள் தொத்து வியாதிகள்?

3. இவற்றிற்கு வேறு வார்த்தைகள் சொல்லு:

தழும்பு, புயம், வேடிக்கை, கசிந்து.

"அம்மையினால் வருஷா வருஷம் அநேக ஜனங்கள் சாகிறார்கள்." இவ்வாக்கியத்திலிருக்கும் வட மொழி எழுத்துக்கள் எவை? தமிழ்ப் பாஷையில் வழங்கிவரும் வடமொழி எழுத்துக்களைச் சொல்லு.

# 27. கோபம்

| | | |
|---|---|---|
| கோபம் | பழி | விசாரணை |
| குடிகெடுக்கும் | பகையாளி | பூர்வத்தார் |
| கூடிவர | கருணை | ஆளாவான் |
| துயர் | ஈனம் | உதவாதவன் |
| பொல்லாது | மறலி | ஆலோசனை |
| உறவு | நரகக்குழி | புண்பட |

1. கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்
கோபமே ஒன்றையும் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்.

2. கோபமே பொல்லாது, கோபமே சீர்கேடு
கோபமே உறவறுக்கும்
கோபமே பழிசெயும், கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்.

3. கோபமே ஈனமாம், கோபமே எவரையும்
கூடாமல் ஒருவனுக்கும்
கோபமே [1]மறலி முன் கொண்டுபோய்
தீய நரகக் குழியினில் தள்ளுமாம்.

(அறப்பளீசுரசதகம்)

“கொலை செய்யாதே; கொலை செய்கிறவன் நியாய விசாரணைக்கு ஆளாவான்” என்று பூர்வத்தாருக்கு உரைத்ததாகக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்வதோ: தன் சகோதரன்மேல் கோபம்கொள்ளும் எவனும் நியாய விசாரணைக்கு ஆளாவான். தன் சகோதரனை உதவாதவனே என்று சொல்லுகிறவன் ஆலோசனைச்

---

[1] மறலி = இயமன்.

சங்க விசாரணைக்கு ஆளாவான். மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஆளாவான்.”

(இயேசுநாதர்)

ஆகையால்,

‘கோபம் கொள்ளேல்’
‘புண்படப் பேசேல்’

அப்பியாசம்

1. விடை கூறு:

   1. கோபத்தினால் வரும் கெடுதல்கள் எவை?
   2. பாவங்களுக்கெல்லாம் தாயும் தந்தையும் எது? ஏன்?

2. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு.

   துயர், உறவு, பழி, பகை, கருணை, ஈனம், மறலி, பூர்வத்தார், தீய, மூடன்.

3. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:
   பகை, பாவம், பொல்லாது, நரகம்.

4. இப்பாடம் முழுவதையும் பாராமல் படிக்கவேண்டும்.

# 28. குடியானவன்

| | | |
|---|---|---|
| குடியானவன் | உபாயம் | குந்தாலி |
| பண்படுத்தி | சாகக்கிடந்தான் | திரவியம் |
| வருடம் | மரணகாலம் | உத்தேசித்து |
| வரும்படி | மண்வெட்டி | ஆஸ்தி |
| புத்திமதி | கடப்பாரை | மந்திரம் |

ஒரு குடியானவனுக்கு மூன்று குமாரர் இருந்தார்கள். அவர்கள் மூவரும் முழுச் சோம்பேறிகள். சரியானபடி தங்கள் நிலத்தை உழுது



பண்படுத்திப் பயிரிடுகிறதில்லே. ஆகையால் வருடந்தோறும் வரும்படி குறைந்துகொண்டே வந்தது. தகப்பன் என்ன புத்திமதி சொன்னபோதிலும் அவர்கள் கஷ்டப்பட்டு வேலே செய்கிறதில்லே. இதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று குடியானவன் பலவிதமாக யோசித்துக்கொண்டிருந்தான்.

கடைசியாகக் குடியானவன் வியாதிப்பட்டுச் சாகக்கிடந்தான். அச்சமயத்தில் அவன் தன் குமாரரைக் கூப்பிட்டு, 'என் அருமைப் பிள்ளேகளே! இப்பொழுது எனக்கு மரணகாலம் சமீபித்திருக்கிறது. நான் நெடுநாளாகச் சேர்த்து வைத்திருந்த பணத்தை நமது வயலில் புதைத்து வைத்திருக்கிறேன். ஆனுல் இன்ன இடத்தில் புதைத்து வைத்தேன் என்று எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லே. நீங்கள் வயலே ஆழமாக வெட்டித் தேடிப்பார்த்தால் அது எப்படியும் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் சீமான்கள் ஆகலாம். கடவுள் உங்களே ஆசீர்வதிப்பாராக' என்று சொல்லி இறந்துபோனுன்.

குமாரர் தகப்பன் வார்த்தையை நம்பி மண்வெட்டி, கடப்பாரை, குந்தாலி முதலிய ஆயுதங்

களைக்கொண்டு ஆளுக்கு ஒரு பக்கமாக வயல் முழுவதும் ஆழமாக வெட்டிப் பார்த்தார்கள். திரவியம் யாதொன்றும் அகப்படவில்லை. அதனால் சோர்வடைந்து நிலத்தைப் பழையபடி சமப்படுத்திப் பயிரிட்டார்கள். அவ்வருஷத்தில் அவர்களுக்கு எவ்வருஷத்திலும் விளையாத விசேஷ தானியம் விளைந்தது. அதனால் அவர்கள் பணக்காரர் ஆனார்கள். நிலத்தை ஆழமாக உழுது பயிரிட்டால் விளைச்சல் நன்றாயிருக்கும் என்றும், தங்கள் தகப்பனார் இதை உத்தேசித்தே வயலில் ஆஸ்தியைப் புதைத்து வைத்திருப்பதாகச் சொன்னார் என்றும் தெரிந்துகொண்டார்கள்.

'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை'
'அகல உழுவதினும் ஆழ உழு'
'சீரைத் தேடின் ஏரைத் தேடு'

அப்பியாசம்

1. இந்தக் கதையை மௌனமாகப் படித்து, பின்பு சொல்லு.

2. பயிரிடுகிறவர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் எவை?

3. குடியானவர்களுக்கேற்ற இரண்டு பழமொழிகள் சொல்லு.

4. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு.

வரும்படி, திரவியம், உபாயம், உத்தேசித்து, மந்திரம்.

5. "சீரைத்தேடின் ஏரைத்தேடு." இதில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் சொல்லு.



# 29. ஆப்பிரிக்கா கண்டத்து அறிவீனர்

| | |
|---|---|
| ஆப்பிரிக்க | சப்பாத்து |
| ஐரோப்பா | பிசாசு |
| அந்தகாரம் | கழற்றினர் |
| நாகரீகம் | பிடுங்கி |
| பாதிரியார் | மேஜோடு |

ஆப்பிரிக்கா கண்டத்துக்கு 'அந்தகாரக் கண்டம்' என்றும் பேர். முற்காலத்தில் அக்கண்டத்தில் வசித்த ஜனங்கள் மிகுந்த அறிவீனரும் நாகரீகமற்றவர்களுமாய் இருந்தார்கள்.

ஒரு தடவை ஐரோப்பா கண்டத்தைச்சேர்ந்த இங்கிலாந்து தேசத்திலிருந்து ஒரு பாதிரி

யார் தம் தேச வழக்கப்படி தமது பாதங்களில் சப்பாத்து போட்டுக்கொண்டு அங்குள்ள ஒரு சிறு கிராமத்துக்குப் போனார். அவ்வூரார் அதற்கு முன் வெள்ளை மனிதரான ஐரோப்பியரை எப்பொழுதும் கண்டதில்லை. அதனால் அவர்கள் ஆச்சரியத்தோடும் பயத்தோடும் அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். பின்பு அவர்கள் அவரைப் பார்த்து, 'ஐயா! நீர் மனுஷனல்ல, ஒரு பிசாசு, ஏனென்றால், உமது கால்களில் விரல்களில்லை. தயவுசெய்து எங்கள் ஊரைவிட்டு ஓடிப்போய்விடும்' என்று உரத்த சத்தமாய்க் கத்தினார்கள்.

பாதிரியார் அவர்கள் பயப்பட்ட காரணம் கண்டு, ஒரு குளக்கரையில் உட்கார்ந்து, தமது சப்பாத்தைக் கழற்றினார். அதுகண்டு அவர்கள் சற்று பயம் தெளிந்து கிட்ட வந்தார்கள். அவர் தமது அவயவத்தின் ஒரு பாகத்தைப் பிடுங்கிப் போட்டார் என்று எண்ணி ஆச்சரியப்பட்டார்கள். மற்ற அவயவங்கள் யாவும் சரியாயிருக்கின்றனவா என்றும் கவனித்தார்கள். சப்பாத்துக்குக் கீழ் வெள்ளை மேஜோடு போட்டிருந்தார். அதைக் கண்டபொழுது அவர்கள் 'நாங்கள் சொன்னது சரியே, நீர் ஒரு பிசாசுதான், நீர் கழற்றிய பின்னும் உமக்கு விரல்களில்லையே' என்றார்கள்.

அப்பால் அவர் மேஜோட்டையும் கழற்றித் தமக்கு ஒவ்வொரு பாதத்திலும் ஐந்து விரல்கள் இருப்பதைக் காட்டினார். அவரை அப்பொழுதுதான் அவர்கள் ஒரு மனிதன் என்று நம்பினார்கள்.

அப்பியாசம்

1. ஆப்பிரிக்கா கண்டம் எங்கே யிருக்கிறது? ஐரோப்பா கண்டம் எங்கே யிருக்கிறது? நாம் எந்தக் கண்டத்தில் இருக்கிறோம்? உலகப் படத்தில் மூன்று கண்டங்களையும் காட்டு.

2. ஆப்பிரிக்காவுக்கு ஏன் அந்தகாரக் கண்டம் என்று பெயர்?

3. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு.

அந்தகாரம், நாகரீகம், அறிவீனர், பாதிரியார்.

4. இந்த அட்டவணையைப் பூர்த்தி செய்:

| ஒருமை | பன்மை |
|---|---|
| ——— | அறிவீனர் |
| ——— | மனிதர் |
| ——— | ஐரோப்பியர் |
| ——— | கால்கள் |
| ——— | விரல்கள் |
| ——— | பாதங்கள் |

# 30. கிழவனும் சிறுவனும்

| | | |
|---|---|---|
| குடுகுடு கிழவன் | வாழ்த்துகிறோம் | கடமை |
| நடுகிறீர் | உழைக்க | மன்னிக்க |
| குழந்தாய் | உடுப்பு | கைகூப்பி |
| புசிக்கிறது | படிப்பு | தலைவணங்கி |
| நினைத்து | பாடுபடுகிறது | கும்பிட்டு |

வயது சென்ற குடு குடு கிழவன் ஒருவன், ஒரு நாள் ஒரு சிறு மாங்கன்றை வெகு பத்திரமாய்க் கொண்டுவந்து தன் தோட்டத்தில் ஒரு குழி



வெட்டி நட்டுக்கொண்டிருந்தான். அவ்வேளையில் ஒரு சிறுவன் அவனைப் பார்த்து, 'தாத்தா! தங்களை நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், கோபித்துக்கொள்ளாதேயுங்கள்' என்முன். அப்பொழுது கிழவன் சந்தோஷத்தோடு சிரித்த முகமாய், 'என்ன கேள்வி கேட்கப்போகிமுய் குழந்தாய்?' என்முன். சிறுவன் 'தாத்தா! நீங்கள் இப்பொழுது குடுகுடு கிழம் ஆகிவிட்டீர்கள். நீங்கள் இன்னும் கொஞ்ச நாள்தான் உயிரோடு இருக்கப்போகிறீர்கள். இந்த மாங்கன்று வளர்ந்து, மரமாகிக் கனிகொடுக்கும் வரையில் நீங்கள் உயிரோடிருந்தால் எனக்குச் சந்தோஷம் தான். ஆனல் அதுவரையில் நீங்கள் உயிரோடு இருப்பீர்களென்று யார் சொல்லக்கூடும்? ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு இம்மாங்கன்றை நடுகிறீர்கள்?' என்முன்.

அதற்குக் கிழவன், 'குழந்தாய், நீ சொல்லு கிறபடி இந்த மாங்கன்று மரமாக வளர்ந்து பலன் கொடுக்குமுன் நான் இறந்துபோவேன் என்பது உண்மைதான். ஆனால் இங்கிருக்கும் மற்ற மரங் களின் கனிகளை நாம் சாப்பிடுகிறோம் அல்லவா? அவைகள் யாரால் வைக்கப்பட்டன? அவை களை நட்டவர்கள் யாவரும் இறந்துபோய்விட் டார்கள் அல்லவா? ஆகிலும் அந்த மரங்களி லிருந்து கிடைக்கும் கனிகளை நாம் ஆசையோடு புசிக்கும்பொழுது, அம்மரங்களை வைத்துக் காப் பாற்றின நமது முன்னோரை நினைத்து அவர்களை வாழ்த்துகிறோம். அப்படியே நானும் இந்த மாங்கன்றை நட்டுப் பயிராக்கி வைத்துவிட்டுப் போனால், எனக்குப் பின் வருகிறவர்கள் இதன் பழத்தைச் சாப்பிட்டு, இன்பம் அடைந்து என்னை வாழ்த்துவார்கள். ஆயினும் பிறர் என்னை வாழ்த்துவார்கள் என்று எண்ணியே நான் இவ் வேலையைச் செய்கிறேனோ? நமக்கு வரக்கூடிய லாபத்தை மாத்திரம் கருதி நாம் எந்த வேலையும் செய்யக்கூடாது. உலகத்தில் எல்லாருக்கும் நன்மை உண்டாகும்படி நாம் உழைக்கவேண்டும். ஏனென்றால், நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடுப்பு, படிக்கும் படிப்பு முதலிய ஒவ்வொன்றிற் காகவும் அநேகர் பாடுபடுகிறார்கள். மற்றவர்கள் நமக்காக உழைக்கிறபடியால், நாமும் மற்றவர் களுக்காக உழைக்கவேண்டியது நமது கடமை' என்று சொன்னான்.

அதைக் கேட்ட சிறுவன், 'தாத்தா, தாங்கள் தயவுசெய்து, நான் தெரியாமல் கேட்ட கேள்விக்கு என்னை மன்னிக்கவேண்டும்' என்று சொல்லிக் கைகூப்பி, தலைவணங்கி, கும்பிட்டுச் சென்றான்.

அப்பியாசம்

1. விடை கூறு:

1. மாங்கன்று வைத்துக்கொண்டிருந்த கிழவனைப் பார்த்துச் சிறுவன் கேட்ட கேள்வி என்ன?

2. அதற்குக் கிழவன் சொன்ன பதில் என்ன?

3. நாம் மற்றவர்களுக்காக ஏன் உழைக்கவேண்டும்?

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகள் வைத்து வாசி:

நாம் —— உணவு —— உடுப்பு, படிக்கும் —— முதலிய ஒவ்வொன்றிற்காகவும் அநேக——ர்.

3. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு. குடுகுடு கிழவன், விரும்புகிறேன், பலன், பிறர், கருதி, நட்டவர்கள்.

4. "இங்கிருக்கும் மரங்களின் கனிகளை நாம் சாப்பிடுகிறோம்." இவ்வாக்கியத்தில் எழுவாய் எது? பயனிலை எது? செயப்படுபொருள் எது? பயனிலை ஒருமையாய் இருந்தால் இந்த வாக்கியம் எப்படியிருக்கும்?

# 31. கடிதம் எழுதுவது

| | |
|---|---|
| பரீக்ஷை | புதிதாய் |
| ஆரம்பித்தது | அன்பாய் |
| தேறியிருக்கிறேன் | விபரமாய் |

(சிநேகிதனுக்குக் கடிதம் எழுதுவது)

நெ. 15, மேட்டுத் தெரு,
தஞ்சாவூர்.
20—6—1942.

எனது பிரியமுள்ள சிநேகிதனுகிய சௌந்தராஜனுக்கு, அநேக வந்தனம்.

இவ்விடம் நாங்கள் யாவரும் கடவுள் கிருபை யால் சுகமாயிருக்கிறோம். அப்படியே அவ் விடத்தில் நீயும் மற்ற நமது சிநேகிதர் யாவரும் சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

எங்களுக்கு இந்த மாதம் 15-ம் தேதி பள்ளிக் கூடம் ஆரம்பித்தது. வருஷப் பரீக்ஷையில் நான் என் வகுப்பில் முதலாவதாகத் தேறியிருக் கிறேன். அப்பா எனக்கு மேல் வகுப்புக்குரிய புஸ்தகங்கள் யாவையும் புதிதாய் வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். நான் சந்தோஷமாய்ப் படிக்கிறேன்.

எங்கள் உபாத்தியாயர் மிகவும் நல்லவர். பிள்ளைகளை வெகு அன்பாய் நடத்துகிறார். எல் லாப் பாடமும் நன்றாய்ச் சொல்லிக் கொடுக்கிறார். விளையாட்டு நேரத்தில் எங்களோடு விளையாட வந்துவிடுவார். சில புது விளையாட்டுகள் எங்க ளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

நீயும் உன் வகுப்பில் முதலாவதாகத் தேறி யிருப்பாயென்று எண்ணுகிறேன். அதைப்பற்றி யும், உங்கள் பள்ளிக்கூடத்தில் உள்ள மற்ற விஷ யங்களைப்பற்றியும் விபரமாய் எழுது.

இப்படிக்கு,

உனது அன்புள்ள சிநேகிதன்,

தா. தினகரன்.

அப்பியாசம்

பொங்கல் லீவில் உன் வீட்டுக்கு விருந்தினனாக வந்து போகும்படி உன் சிநேகிதனுக்கு ஒரு கடிதம் எழுது.

# 32. கடிதங்களுக்கு மேல் விலாசம் எழுதும் முறை

| | | |
|---|---|---|
| மேல் விலாசம் | சங்கிலிக் கோர்வை | நம்பர் |
| விலாசதார் | அரைகுறை | ஜில்லா |
| தபால் ஆபீஸ் | சுருக்கம் | தாமதம் |

சிலருக்குக் கடிதங்கள் எழுதத் தெரிந்தபோதிலும் கடிதங்களுக்கு மேல்விலாசம் எப்படி எழுதுகிறதென்று தெரிகிறதில்லை. ஆகையால் மற்றவர்களிடத்தில் போய் மேல்விலாசம் எழுதிக்கொடுக்கும்படி கேட்பார்கள். வேறு சிலர் அரைகுறையாய், அல்லது தெளிவாய் வாசிக்கக்கூடாதபடி, சங்கிலிக் கோர்வையாய் விலாசம் எழுதி யனுப்புவார்கள். அதனுல் அக்கடிதங்கள் சரியாய்ப் போய்ச் சேர்கிறதில்லை. நம் ஒவ்வொருவருக்கும் கடிதங்கள் எழுதத் தெரிதல் மாத்திரம் போதாது. அக்கடிதங்களுக்குச் சரியானபடி மேல்விலாசம் எழுதவும் தெரியவேண்டும்.

ஜனங்கள் பலவிதமாக மேல்விலாசங்கள் எழுதுகிருர்கள். ஆனுல், சுருக்கமாகவும், தெளிவாகவும், விலாசத்தைப் பார்த்தவுடனே இன்னுருக்கென்று தெரியும்படியாகவும் எழுதுவதே முதல்தரமான முறை. முதல் வரியில் கடிதத்தை யாருக்கு அனுப்புகிருேமோ அவருடைய சரியான பெயரும்; இரண்டாவது வரியில் அவருடைய வீட்டின் நம்பரும் தெருவின் பெயரும்; மூன்ருவது வரியில் அவர் வசிக்கும் ஊர்ப்பெயரும்; நான்காவது வரியில் அவ்வூரைச் சேர்ந்த தபால் ஆபீஸ் பெயரும்; ஐந்தாவது வரியில் அவ்வூர் இருக்கும் ஜில்லாவின் பெயரும் எழுத

வேண்டும். இவ்விதமாக, எழுதியனுப்பினல் கடிதங்கள் தாமதமின்றி நேராய் விலாசதார் கையில் போய்ச் சேரும்.

| | |
|---|---|
| ம-ா-ா-ஸ்ரீ. சி. சௌந்தரராஜன், | முத்திரை |
| 9, பாலாஜிசிங் தெரு, | |
| பெரியபேட்டை, | |
| சைதாப்பேட்டை போஸ்ட், | |
| செங்கற்பட்டு ஜில்லா. | |

அப்பியாசம்

1. கடிதங்களுக்கு மேல் விலாசம் எழுதும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள் எவை?

2. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் சொல்லு:
குறைவு, சுருக்கம், தாமதம், நேர்.

## 33. ஓர் ஊமை உபாத்தியாயர்

| | | |
|---|---|---|
| ஊமை | அதிகரித்தது | மோந்து |
| மிஞ்சினவன் | ஆண்டி | சீறி |
| முயற்சி | மரியாதை | தொண்டை |
| செல்வாக்கு | போக்கு | திக்குமுக்கு |
| மதுபானம் | விசனம் | கத்தி |
| குடித்தனம் | கும்மாளம் | தும்மி |
| மேலிட்டது | நுழைந்து | மோதி |
| செலவழிந்தது | அம்மணி | புரண்டு |

ஓர் ஊரில் செல்லன் என்றொரு கொல்லன் இருந்தான். அவன் மகா சுறுசுறுப்புள்ளவன். இரும்பினுல் மேன்மையான வேலைகள் செய்யக் கூடியவன். கருமார் தொழிலில் அவனுக்கு மிஞ்சினவன் எவனும் அவன் ஊர்ப்பக்கத்தில் கிடையாது. தன் திறமையினுலும், முயற்சியினுலும், திரண்ட பொருள் சம்பாதித்து அதிக செல்வாக்குள்ளவனுய் வாழ்ந்து வந்தான்.

இப்படியிருக்கையில் செல்லன் சில குடிகாரருக்குச் சிநேகிதனுனன். அவர்களால் இவனுக்கும் மதுபான ஆசையுண்டாயிற்று. அதில் கொஞ்சம் கொஞ்சமாகப் பழகி, சில நாட்களுக்குள் தேறின குடிகாரனுகிவிட்டான். அவன் குடியில் வளர வளர, குடித்தனத்தில் குறைந்தான். சோம்பல் மேலிட்டது; வருமானம் குறைந்தது; தொழிற்சாலை மூடப்பட்டது; கருவிகள் துருப்பிடித்தன; முன் சேர்த்த பணம் செலவழிந்தது. கடையில் கடன் அதிகரித்தது; வீட்டில் அன்னம் குறைந்தது; வெளியில் வெட்கக்கேடும் அவமானமும் உண்டாயிற்று. சாராயம் குடித்தால் அரசனும் ஆண்டியாவான் என்னும் உண்மையை உணராதிருந்தான்.

இப்படி அவன் சீர்கெட்டவனுய்த் திரிகையில் ஒருநாள் அவனுடைய பழைய நல்ல சிநேகிதர்களிற் சிலர் அவன் வீட்டுக்கு வந்தார்கள். அவன் அவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டுமென்றெண்ணி அவர்களைச் சாராயக்கடைக்குக் கூப்பிட்டான். அவர்கள் ஒவ்வொருவரும் அவனுடைய நிலைமையைப் பார்த்துப் பரிதபித்து ஏதோ போக்குச் சொல்லிவிட்டு, அவனுடன்

சாராயக்கடைக்குப் போகாமல் தங்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். அதனுல் செல்லன் கோபமடைந்து சற்றுநேரம் விசனத்துடன் உட்கார்ந்திருந்தான்.

செல்லன் அருமையாக ஒரு ஆடு வளர்த்தான். அது அவனேடு நன்ருய்ப் பழகி இருந்தது. எங்கே போனுலும் கூடவே போகும். அவன் அந்த ஆட்டைத் தட்டிக்கொடுத்து என் அன்பான ஆடே, எல்லாரும் என்கூட வராவிட்டாலும் நீயும் வரமாட்டாயோ? கடைக்குப் போகலாம் வாவென்று கூப்பிட்டான். அது வழக்கம் போல் கும்மாளம் போட்டுக்கொண்டு அவன் கூடப்போனது.

அவன் ஒரு சாராயக்கடைக்குள் நுழைந்து நன்ருய்க் குடித்துவிட்டு, மறுபடியும் கொஞ்சம் வாங்கி, தன் ஆட்டைக் கூப்பிட்டு, 'வா அம்மணி வா, மற்றவர்கள்தான் வேண்டாமென்று சொல்லி விட்டார்கள், நீயாவது இதைக் குடி' என்ருன். அது சாராயத்தை மோந்து பார்த்து, சீறிச் சீறித் தலையை ஆட்டித் தன் வெறுப்பைக் காட்டிற்று. உடனே அவன் ஆட்டைப் பிடித்து, தன் கால்களுக்கிடையில் வைத்துக்கொண்டு, வாயைத் திறந்து, அதன் தொண்டைக்குள் சாராயத்தை வார்த்தான். வார்த்தவுடனே அது திக்கு முக்காடிக் கீழே விழுந்து, கதறிக் கதறித் தலையை ஆட்டி, தும்மி, முட்டி, மோதி, உருண்டு புரண்டு ஒட்டம்பிடித்தது. குடிகாரனே அதைப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான்.

அடுத்த நாள் அவன் சாராயக்கடைக்குப் போகும்பொழுதும் ஆட்டைக் கூட்டிக்கொண்டு

போனான். ஆனால் சாராயக்கடையில் சென்ற வுடனே ஆடு வெளியே வந்து ஓட்டம் பிடித்தது. நாலைந்து நாட்களாய் இப்படியே நடந்தது. செல்லன் இதைக் கவனித்துத் தானும் குடியை விட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்தான். அப் படியே தன் ஊமை உபாத்தியாயராகிய ஆட்டின் நடக்கையினால் குடியை விட்டுவிட்டான். அதன் பின் அவன் வீடு முன்போல் வாழ்வடையத் தொடங்கிற்று.

## அப்பியாசம்

1. விடை சொல்லு:

1. குடியில் பழகுமுன் செல்லனுடைய வாழ்க்கை எப்படி யிருந்தது?

2. குடிகாரனானபின் அவன் எப்படி மாறிவிட் டான்?

3. அவனுடைய ஆடு எப்படி அவனுக்குப் புத்தி கற்பித்தது?

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:

ஆண்டி, மிஞ்சினவன், விசனம், கும்மாளம், ஊமை, வார்த்தான்.

3. அவன் குடியில் வளரவளர குடித்தனத்தில் குறைந் தான். வருமானம் குறைந்தது. முன் சேர்த்த பணம் செலவழிந்தது. கடன் அதிகரித்தது.

தடித்த எழுத்துக்களாலான வார்த்தைகளைப் பன்மை யாக்கி ஒவ்வொரு வாக்கியத்தையும் திருப்பி எழுது.

# 34. கூட்டுறவு

| | | |
|---|---|---|
| கூட்டுறவு | ஆங்கிலம் | கிட்டி |
| கூட்டாளி | மந்தை | கிளித்தட்டு |
| கன்னு பின்னு | சொட்டு | கோலாட்டம் |
| பளிச்சென்று | ஜலம் | கும்மி |
| சம்பாஷித்து | நதி | கிரிக்கெத் |
| முதலாளி | கவடி | தென்னிஸ் |
| அண்ட் கோ | கண்ணும்பூச்சி | உதைபந்து |

ஒருநாள் தங்கையாவும் பொன்னையாவும் கன்னுபின்னுவென்று பேசிக்கொண்டு கடற் கரைப்பக்கம் உல்லாசமாய் உலாவப்போனார் கள். போகும் வழியில் அழகான பெரிய கட்டடம் ஒன்று இருந்தது. அதன் முன் பளிச்சென்று யாவருக்கும் தெரியும்படி பெரிய எழுத்துக்களில் பெருமாள் அண்ட் கோ என்று எழுதியிருந்தது. அப்பொழுது அவர்கள் தங்கள் உல்லாசப் பேச்சை நிறுத்திவிட்டுப் பின்வருமாறு சம்பா ஷிக்க ஆரம்பித்தார்கள்:—

**தங்கையா:** அண்ணு, பொன்னணண்ணு! பெரு மாள் அண்ட் கோ என்று இதில் எழுதியிருக் கிறதே, அதன் பொருள் என்ன?

**பொன்னையா:** இது உனக்குத் தெரியாதா? பெருமாள் என்பவர் ஒரு பெருத்த வியாபாரி, மிகுந்த திரவியமுள்ள ஒரு முதலாளி. அண்ட் கோ என்பது அண்ட் கம்பேனி என்னும் இரண்டு ஆங்கில வார்த்தைகளின் சுருக்கம். பெருமாள் அண்ட் கோ என்றால் பெருமாளும் அவருடைய கூட்டாளிகளும் நடத்தும் தொழிற்சாலை அல்லது வியாபாரஸ்தலம்.

தங்கையா: அப்படியா? பெருமாள் என்பவர் பெரிய பணக்காரரானல் அவர் தனிமையாய் ஏன் வியாபாரம் செய்யக்கூடாது? அவருக்குக் கூட்டாளிகள் எதற்கு?

பொன்னையா: தனி மரம் தோப்பாகுமா? தனி வீடு ஊராகுமா? ஒரு மாடு மந்தையாகுமா? ஒரு கடை சந்தையாகுமா? சொட்டு ஜலம் நதியாகுமா? ஆகமாட்டாதல்லவா? அதுபோலவே, தனி வியாபாரமும் பெரு வியாபாரமாகமாட்டாது. நாலாறு கூடினல் பாலாறு, நான்குபேர் சேர்ந்தால்தான் எந்தக் காரியமும் நன்ருயும், சிறப்பாயும் முடியும். கைத்தொழில் விருத்திக்கும், வியாபார விருத்திக்கும் கூட்டுறவு அவசியம் வேண்டும்.

தங்கையா: அண்ணு, நீர் சொல்லுகிறது எனக்கு நன்ருய் விளங்கவில்லை. இன்னும் சற்று தெளிவாய்ச் சொல்லும் பார்ப்போம்.

பொன்னையா: பள்ளிக்கூடத்தில் நாம் விளையாடுவதற்கும், தோட்டம் போடுவதற்கும், கூட்டாளிகள் இல்லாவிட்டால் எப்படியிருக்கும் என்று எண்ணுகிருய்? கவடி, கண்ணும்பூச்சி, கிட்டி, கிளித்தட்டு, கோலாட்டம், கும்மி, கிரிக்கெத், தென்னிவ்ஸ், உதைபந்து முதலிய விளையாட்டுக்களைக் கூட்டாளிகளின்றித் தனிமையாய் விளையாடினல் எப்படியிருக்கும்? உற்சாகமும் சந்தோஷமும் உண்டாகுமா? உண்டாகமாட்டாதல்லவா? அதுபோலவே பயிர்த்தொழில், கைத்தொழில், வியாபாரம் முதலிய ஒவ்வொன்றும் விருத்தியடைவதற்குக் கூட்டாளிகள் அவசியம் வேண்டும். இதற்

கென்றே சங்கங்களும் அநேகம் ஏற்பட்டிருக்கின்றன.

‘எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்’ என்னும் பழமொழி உனக்குத் தெரியாதா?

தங்கையா: அண்ணு, பொன்னண்ணு! நீர் சொன்னது இப்பொழுது எனக்கு நன்ருய் விளங்கிற்று. கூட்டுத்தொழில் நாட்டுக்கு நன்மையுண்டாக்குமென்று நன்ருய் அறிந்துகொண்டேன். உமக்கு மிகுந்த வந்தனம்.

அப்பியாசம்

1. இப்பாடத்திலிருக்கும் விஷயங்களை இரண்டு பிள்ளைகள் சம்பாஷணை செய்து நடித்துக் காட்டலாம்.

2. இவற்றிற்கு அதே பொருள் உள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:

நதி, சங்கம், அண்ட்கோ, கன்னுபின்னு, கூட்டாளி.

3. இந்த அட்டவணையைப் பூர்த்தி செய்:

| ஒன்ருயிருந்தால் | அநேகம் சேர்ந்தால் |
|---|---|
| மரம் | தோப்பு |
| வீடு | ——— |
| கடை | ——— |
| மாடு | ——— |

# 35. கூட்டுறவு (கீர்த்தனை)

| | |
|---|---|
| உய்வோம் | நயம் |
| புல்லோர் | மன்னுயிர் |
| வேண | தன்னுயிர் |

இராகம்—சிந்து தாளம்—சதுசிரம்

1. எல்லோரும் கூடியுலகில், இன்பமா[1]யுய்
   வோம்.
   நல்லோர்க்கும் [2]புல்லோர்க்கும் [3]வேண,
   நன்மைகள் செய்வோம்.

2. கூட்டு முறையில் சேர்ந்து நாம், குணப்
   படுவோம்.
   நாட்டில் செல்வம் ஓங்கி நாமும், [4]நயம்
   பெறுவோம்.

3. தாமே வாழும் எண்ணமதை, தள்ளிவிடு
   வோம்.
   பூமியி லெல்லோரும் கூடி, புகழடை
   வோம்.

4. மன்னுயிர் தன்னுயிராய், மனதிலெண்ணு
   வோம்.
   இன்னுமெங்கள் ஆண்டவரை, துதி
   பண்ணுவோம்.

(சிவராம பாகவதர்)

---

[1] உய்வோம் = ஜீவிப்போம். [2] புல்லோர் = தாழ்ந்தவர்.
[3] வேண = அநேக. [4] நயம் = நன்மை.

அப்பியாசம்

1. இந்தக் கீர்த்தனையை இராகத்துடன் பாட வேண்டும்.

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு.

உய்வோம், புல்லோர், வேண, நயம், புகழ, மன்னுயிர், துதி.

# 36. வேத வாக்கியங்கள்

| | | |
|---|---|---|
| அடிமை | வீணர் | அலப்பாதே |
| கடிவாளம் | மதியற்றவன் | அந்நியர் |
| பிரம்பு | கருணைக்கண்ணன் | உபசரிக்க |
| ஏற்றது | செவிகொடு | சத்துரு |
| திருப்தி | அசட்டை | உத்தமன் |

1. மூடன் ஞானமுள்ளவனுக்கு அடிமையாவான்.

2. குதிரைக்குச் சவுக்கும், கழுதைக்குக் கடிவாளமும், மூடனுடைய முதுகுக்குப் பிரம்பும் ஏற்றது.

3. ஒருவன் வேலைசெய்ய மனதில்லா திருந்தால் அவன் சாப்பிடவுங் கூடாது.

4. சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.

5. தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினல் திருப்தியடைவான். வீணரைப் பின்பற்றுகிறவனே மதியற்றவன்.

6. கோபக்காரனுக்குத் தோழனுகாதே; உக்கிரமுள்ள மனுஷனேடே நடவாதே.

7. ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.

8. சிற்றின்பப்பிரியன் தரித்திரன் ஆவான்.

9. கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்.

10. உன்னைப்பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணுதே.

11. வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்.

12. சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது; அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்.

13. பொல்லாத மனுஷர்மேல் பொருமை கொள்ளாதே.

14. உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே.

15. பெருமையுள்ளவனைப் பார்க்கிலும், பொறுமையுள்ளவன் உத்தமன்.

## அப்பியாசம்

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தை வைத்து வாசி:

"குதிரைக்கு ——, கழுதைக்கு ——, மூடனுடைய முதுகுக்கு —— ஏற்றது."

2. இவ்வார்த்தைகளை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது:

அசட்டை, அந்நியர், உபசரிக்க, பெருமை, பொறுமை, பொருமை.

3. இப்பாடத்தில் கொடுத்திருக்கும் வேதவாக்கியங்கள் யாவையும் பாராமல் படிக்கவேண்டும்.

## 37. ஔவையார் அருளிச்செய்த

# கொன்றைவேந்தன்

(சுருக்கம்)

1. அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லற மல்லது நல்லற மன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
6. எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்.
7. ஏவா மக்கள் மூவா மருந்து.
8. ஐயம் புகினும் செய்வன செய்.
9. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
10. கற்பெனப் படுவது சொல்திறம் பாமை.
11. கிட்டா தாயின் வெட்டென மற.
12. கீழோர் ஆயினும் தாழ வுரை.
13. குற்றம் பார்க்கின் சுற்ற மில்லை.
14. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.
15. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
16. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
17. சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு.
18. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
19. சூதும் வாதும் வேதனை செய்யும்.

20. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
21. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
22. தீராக் கோபம் போராய் முடியும்.
23. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
24. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
25. தோழனோடும் ஏழமை பேசேல்.
26. நல்லிணக்கமல்லது அல்லற் படுத்தும்.
27. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
28. நைபவர் எனினும் நொய்ய வுரையேல்.
29. பாலோ டாயினும் காலம் அறிந்துண்.
30. பிழையது பொறுக்கிற் பெரியோராவர்.
31. பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்.
32. மாரி யல்லது காரியம் இல்லை.
33. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
34. மீகாமனில்லா மரக்கலம் ஓடாது.
35. முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்.
36. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
37. மேழிச் செல்வம் கோழை படாது.
38. ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.
39. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.
40. ஓதா தார்க்கில்லை உணர்வோடு ஒழுக்கம்.

38. ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

(சுருக்கம்)

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. ஈவது விலக்கேல்.
4. ஊக்கமது கைவிடேல்.
5. எண்ணெழுத் திகழேல்.
6. ஏற்பது இகழ்ச்சி.
7. ஐயமிட் டுண்.
8. ஓதுவ தொழியேல்.
9. ஔவியம் பேசேல்.
10. கண்டொன்று சொல்லேல்.
11. தந்தைதாய்ப் பேண்.
12. நன்றி மறவேல்.
13. பருவத்தே பயிர்செய்.
14. வஞ்சகம் பேசேல்.
15. அழகலாதன செயேல்.
16. இளமையிற் கல்.
17. கீழ்மை யகற்று.

18. குணமது கைவிடேல்.
19. கூடிப் பிரியேல்.
20. கெடுப்பது ஒழி.
21. கேள்வி முயல்.
22. சான்றோர் இனத்திரு.
23. சூது விரும்பேல்.
24. செய்வன திருந்தச்செய்.
25. சேரிடம் அறிந்துசேர்.
26. சோம்பித் திரியேல்.
27. தீவினை அகற்று.
28. தெய்வம் இகழேல்.
29. தேசத்தோடு ஒத்துவாழ்.
30. நன்மை கடைப்பிடி.
31. நூல் பல கல்.
32. நோய்க் கிடங்கொடேல்.
33. பழிப்பன பகரேல்.
34. பெரியோரைத் துணைக்கோள்.
35. மீதூண் விரும்பேல்.
36. மூர்க்கரோ டிணங்கேல்.
37. மேன்மக்கள் சொல் கேள்.
38. மொழிவதற மொழி.
39. வித்தை விரும்பு.
40. உத்தமனு யிரு.

# 39. பழமொழிகள்

1. அடாது செய்பவர் படாது படுவர்.
2. ஆடையில்லாதவன் அரை மனிதன்.
3. இளமையிற் கற்றது எப்போதும் நிற்கும்.
4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
5. மெய்சொல்லிக் கெட்டவனுமில்லை; பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை.
6. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
7. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.
8. துள்ளுகிற மாடு பொதிசுமக்குமா?
9. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
10. எண் இல்லாதவன் கண் இல்லாதவன், எழுத்து இல்லாதவன் கழுத்து இல்லா தவன்.
11. வருந்தினல் வாராதது ஒன்றும் இல்லை.
12. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
13. இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்.
14. துஷ்டனைக் கண்டால் தூரத்தில் ஒதுங்கு.
15. தோட்டிபோல் உழைத்துத் துரைபோல் சாப்பிடவேண்டும்.
16. தாழ்ந்து நின்ருல் வாழ்ந்து நிற்பாய்.

# செய்யுள் பாகத்தின் அரும்பதவுரை

37. கொன்றைவேந்தன் = கொன்றைப் பூமாலையை யணிந்த சிவபெருமான்.

1. அன்னை = தாய்
பிதா = தகப்பன்
முன்அறி = முதலில் தெரிந்துகொள்ளவேண்டிய.

2. ஆலயம் = கோவிலுக்குப் (போய்)
தொழுவது = (கடவுளைத்) தொழுவது
சாலவும் = மிகவும்
நன்று = நல்லது.

3. இல்லறம் = மனைவியோடு கூடிய நல்வாழ்க்கை
அல்லது = அல்லாதது
நல்அறம் = நல்ல தருமம்
அன்று = ஆகாது.

4. ஈயார் = (பிறருக்குக்) கொடாதவர்களுடைய
தேட்டை = சம்பாத்தியத்தை
தீயார் = (கள்வர் முதலிய) கொடியவர்கள்
கொள்வார் = அபகரித்துக்கொள்வார்கள்.

5. ஊர்உடன் = (தான் வசிக்கும்) ஊராருடன்
பகைக்கின் = விரோதம் செய்துகொண்டால்
வேர்உடன் = அடியோடு
கெடும் = கெடுவான்.

6. எண்ணும் = கணிதமும்
எழுத்தும் = எழுத்துக்களாலாகிய இலக்கிய இலக்கண நூல்களும்
கண்என = (இரண்டு) கண்கள் என்று
தகும் = (சொல்லத்) தகுந்தவை.

7. ஏவா = ஏவாமல் (இதைச் செய்யென்று கட்டளையிடுவதற்குமுன்பே குறிப்பறிந்து செய்கிற)
மக்கள் = பிள்ளைகள்
மூவா = அழிவில்லாத
மருந்து = தேவாமிர்தத்துக்கு ஒப்பாவர்.

8. ஐயம்புகினும் = பிச்சை எடுத்தாலும்
செய்வன = செய்யத்தகுந்த காரியங்களை
செய் = (சரியாகச்) செய்.

9. ஔவியம் = பொறாமைச் சொற்களை
பேசுதல் = சொல்லுதல்
ஆக்கத்திற்கு = செல்வத்திற்கு
அழிவு = அழிவை (உண்டாக்கும்.)

10. கற்பு எனப்படுவது = (பெண்களுக்கு) கற்பு என்று சொல்லப்படுவது
சொல் = (புருஷன்) சொல்லுக்கு
திறம்பாமை = மீறிநடவாதிருத்தலாம்.

11. கிட்டாதாயின் = (விரும்பிய பொருள்) கிடைக்காமல் போனால்
வெட்டென = சீக்கிரத்தில்
மற = (அதை) மறந்துவிடு.

12. கீழோர் ஆயினும் = (உனக்குத்) தாழ்ந்தவராயிருந்தாலும்
தாழ = வணக்கமாக
உரை = (அவர்களுடன்) பேசு.

13. குற்றம் = தப்பிதங்களை
பார்க்கின் = பார்த்துக்கொண்டிருந்தால்
சுற்றம் = உறவினர்
இல்லை = (ஒருவரும்) இருக்கமாட்டார்கள்.

14. கூர் அம்பு = (உன்கையில் இருப்பது) கூர்மையான அம்பாயிருந்தாலும்
வீரியம் = உன் வீரத்தை (வியந்து)
பேசேல் = பேசாதே.

15. கெடுவது = கெடுதலான காரியத்தை
செய்யின் = (உன் சிநேகிதன் உனக்குச்) செய்தால்
விடுவது = (அவன் சிநேகத்தை) விட்டுவிடுவது
கருமம் = (மேலான) செய்கையாம்.

16. கைப்பொருள் தன்னின் = கையில் உள்ள பொருளைக்
காட்டிலும்
மெய்ப்பொருள் = நிலையான பொருள்
கல்வி = கல்வியே யாகும்.

17. சான்றோர் = (பிள்ளைகளை அறிவிலும் ஒழுக்கத்தி
லும்) உயர்ந்தவர்
என்கை = என்று (பெரியோர்) கூறுவது
ஈன்றோர்க்கு = (அவர்களைப்) பெற்றவர்களுக்கு
அழகு = அழகாகும்.

18. சீரை = (ஜீவியத்தில்) வாழ்வை
தேடின் = தேடி விரும்புவாயானால்
ஏரை = ஏர்பிடித்து உழும் தொழிலை
தேடு = தேடிக்கொள்.

19. சூதும் = சூதாட்டமும்
வாதும் = தர்க்கம் செய்தலும்
வேதனை = துன்பத்தை
செய்யும் = உண்டாக்கும்.

20. சோம்பர் = சோம்பேறிகள்
தேம்பி = (வறுமையால்) வாடி
திரிவர் = (சோற்றுக்காக) அலைந்துதிரிவார்கள்.

21. திரை = அலை (மோதுகின்ற)
கடல் = கடலின்மேல்
ஓடியும் = (கப்பல் ஏறிச்) சென்றாகிலும்
திரவியம் = பொருளை
தேடு = சம்பாதி.

22. தீரா = நீங்காத
போர் = பெருஞ்சண்டை.

23. தேடாது =(வருந்திச்) சம்பாதியாமல்
அழிக்கின் =(இருப்பதைச்) செலவு செய்தால்
பாடாய் =(பின்) வருத்தமாக.

24. தொழுது =(ஒருவரிடத்தில்) சேவித்து
ஊண் = உண்ணும் உணவின்
சுவையின் = ருசியைப்பார்க்கிலும்
உழுது = பயிர்த்தொழில் செய்து
ஊண் = உண்ணுகின்ற உணவு
இனிது = இன்பமானது.

25. தோழன் = சிநேகிதன்
ஏழமை = தரித்திரம்.

26. நல்இணக்கம் = நல்ல சிநேகம்
அல்லது = அல்லாத (கெட்ட சிநேகம்)
அல்லல் = துன்பத்தை
படுத்தும் = உண்டாக்கும்.

27. நுண்ணிய = சிறிய
கருமமும் = காரியத்தையும்
எண்ணி = ஆராய்ந்து பார்த்து
துணி = செய்யத் தீர்மானம் செய்.

28. நைபவர் எனினும் = (எதிர்பேசாமல் தமக்குள்ளேயே) வருத்தப்படுகின்ற ஏழைகளானாலும்
நொய்ய = நிந்தையான சொற்களை
உரையேல் = சொல்லாதே.

29. பாலோடு ஆயினும் = பாலோடு சேர்ந்த ஆகாரமானாலும்
காலம் அறிந்து =(சாப்பிடும்) நேரத்தை அறிந்து
உண் = சாப்பிடு.

30. பிழைஅது = குற்றமான வார்த்தைகளை
பொறுக்கின் = பொறுத்துக்கொண்டால்
பெரியோர் = பெருந்தன்மையுடையவர்கள்
ஆவர் = ஆவார்கள்.

31\. பொல்லாங்கு = தீமை
தவிர் = விட்டுவிடு.

32\. மாரி = மழை
அல்லது = இல்லாமல் போனால்
காரியம் = (மனிதர் வாழ்வதற்கு வேண்டிய எந்தக்) காரியமும்
இல்லை = (நடப்பது) இல்லை.

33\. மின் = மின்னல்
பின்னுக்கு = பின்னால்.

34\. மீகாமன் = கப்பல் ஓட்டுபவன்
மரக்கலம் = கப்பல்
ஓடாது = (கடலில் சரியான வழியில்) ஓடாது.

35\. முற்பகல் = முதல் நாளில்
செய்யின் = (நன்மை அல்லது தீமையைச்) செய்தால்
பிற்பகல் = அடுத்த நாளில்
விளையும் = அதன் பயன் உண்டாகும்.

36\. மூத்தோர் = பெரியோர்
வார்த்தை = புத்திமதிகள்
அமிர்தம் = தேவாமிர்தம் போன்றவை.

37\. மேழிச்செல்வம் = கலப்பைபிடித்து உழவுசெய்வதால் வரும் செல்வம்
கோழை = குறைவு.

38\. ஊக்கம் = உற்சாகம்
ஆக்கம் = செல்வம்.

39\. வெள்ளைக்கு = சுத்தமான மனமுள்ளவனுக்கு
கள்ளச்சிந்தை = கபடமான எண்ணங்கள்.

40\. ஓதாதார்க்கு = (நல்ல நூல்களைப்) படிக்காதவற்கு
உணர்வொடு = அறிவோடு
ஒழுக்கம் = நல் நடத்தை.

## 38. ஆத்திசூடி = ஆத்திப் பூமாலையை யணிந்த சிவபெருமான்

1. அறம் = தருமம்
செய = செய்ய
விரும்பு = ஆசைப்படு.

2. ஆறுவது = தணிய வேண்டுவது
சினம் = கோபம்.

3. ஈவது = (ஒருவர் தருமம்) கொடுப்பதை
விலக்கேல் = தடுக்காதே.

4. ஊக்கம் = முயற்சி.

5. எண் = கணக்கு
எழுத்து = எழுதப்படிக்கத் தெரிதல்; இலக்கணம்
இகழேல் = அவமதிக்காதே.

6. ஏற்பது = பிச்சை எடுப்பது
இகழ்ச்சி = கேவலம்.

7. ஐயம் = பிச்சை
இட்டு = கொடுத்து
உண் = சாப்பிடு.

8. ஒதுவது = படிப்பது
ஒழியேல் = விடாதே.

9. ஔவியம் = பொறாமையான வார்த்தைகளை
பேசேல் = பேசாதே.

10. கண்டு = (ஒன்றைப்) பார்த்து
ஒன்று = மற்றொன்றை
சொல்லேல் = சொல்லாதே.

11. தந்தை = தகப்பன்
பேண் = காப்பாற்று.

12. நன்றி = (பிறர்செய்த) உபகாரத்தை
மறவேல் = மறக்காதே.

13. பருவத்தே = பருவகாலத்திலே.

14. வஞ்சகம் = கபடம்; பொய்.

15. அழகு = ஒழுங்கு
அலாதன = இல்லாத செயல்கள்.

16. இளமையில் = இளம்பிராயத்தில்
கல் = படித்துக்கொள்.

17. கீழ்மை = இழிவான குணங்களை
அகற்று = நீக்கு.

18. குணமது = நற்குணங்களை
கைவிடேல் = விட்டுவிடாதே.

19. கூடி = (நல்லவரோடு) சேர்ந்து
பிரியேல் = (அவரை விட்டு) நீங்காதே.

20. கெடுப்பது = (ஒருவருக்குக்) கெடுதி செய்வதை
ஒழி = விட்டுவிடு.

21. கேள்வி = (படித்தவர் சொல்லும் விஷயங்களைக்) கேட்பதற்கு
முயல் = முயற்சிசெய்.

22. சான்றோர் = (புத்தியிலும் குணத்திலும் சிறந்த) பெரியோர்
இனத்து = கூட்டத்தில்
இரு = (சேர்ந்து) இரு.

23. சூது = சூதாட்டம்.

24. செய்வன = செய்யும் காரியங்களை
திருந்த = செவ்வையாக.

25. சேர்இடம் = சிநேகம் செய்வதற்குத்தக்க இடத்தை
அறிந்து = தெரிந்து
சேர் = சிநேகம் செய்.

26. சோம்பி = சோம்பேறியாக.

27. தீவினை = கெட்ட செயல்கள்.

28. தெய்வம் = கடவுளை
இகழேல் = பழிக்காதே.

29. தேசத்தோடு = நாட்டில் உள்ள ஜனங்களோடு
ஒத்து = (மனம்) ஒத்து
வாழ் = வாழ்வாயாக.

30. நன்மை = நன்மையான காரியங்களை
கடைப்பிடி = உறுதியாகப்பிடி.

31. நூல் = புஸ்தகம்
கல் = படி.

32. நோய் = வியாதி.

33. பழிப்பன = பழிக்கப்படும் இழி சொற்களை
பகரேல் = சொல்லாதே.

34. துணைகொள் = துணையாக வைத்துக்கொள்.
35. மீதூண் = (அளவுக்கு) அதிகமான ஆகாரம்.
36. மூர்க்கரோடு = முரட்டுத்தனம் உடையவர்களோடு
இணங்கேல் = சேராதே.

37. மேன்மக்கள் = உயர்ந்தோருடைய
சொல் = வார்த்தைகளை
கேள் = கேட்டு நட.

38. மொழிவது = சொல்லும் விஷயத்தை
அற = சந்தேகம் இல்லாதபடி
மொழி = சொல்லு.

39. வித்தை = படிப்பு, கல்வி

40. உத்தமன் = நற்குணமுள்ளவன்.

RTR 7046

# C. L. S. தமிழ் வாசகங்கள்

தமிழ் வாசகங்கள் 1—5 வகுப்புகளுக்கு

By S. G. DANIEL

அமிர்த வாசகங்கள் 1—5 வகுப்புகளுக்கு

By L. A. PITHAVADIAN

சித்திர வாசகங்கள் 1—8 வகுப்புகளுக்கும்

I—III பாரங்களுக்கும்

By P. N. APPUSAWMY &

J. P. MANIKKAM

தமிழ் களஞ்சியம் I—III பாரங்களுக்கு

By K. P. SANTOSH

N.B. முதல் மூன்று வாசக் வரிசைகள் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் சக்கன்டரி பாடசாலையிலும் உபயோகிக்க அரசாங்கத்தாருடைய அனுமதி பெற்றவை.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

Post Box 501, Park Town, Madras

and at Bangalore Mysore Bezwada Colombo